04.07.2013

# உதய சூரியன்

Source for reading hunters

களம் - 01. சூரியன் -44 பக்கம்: 32 விலை: 20/=




## ரைசைகூட கதவென

விமானத்தின் கதவை திறக்க முயன்ற

அரசியல்வாதியின் மகன்

மட்பாண்ட உற்பத்திகளை பாதுகாக்க என்ன செய்யப் போகிறீர்கள்?

## கௌதம புத்தரை இழிவுபடுத்தாதீர்கள்



# கௌதம புத்தரை இழிவுபடுத்தாதீர்கள்

யுத்த வெற்றிக்குப்பின்னர் சேதமடைந்த வீதிகள் திருத்தப்படுகின்றதோ இல்லையோ தெருவுக்கொரு புத்தர் சிலை மாத்திரம் நிறுவப்பட்டு வருகின்றன. எங்கே நமது வீட்டுக்கு முன்னாலும் இரவோடு இரவாக புத்தர் சிலை முளைத்திருக்குமோ என்ற அச்சத்துடனேயே கண்விழிக்கவேண்டியுள்ளது என்பது பலரின் அங்கலாய்ப்பாக இருக்கிறது.

சிறுபான்மை இனம் என்ற ஒன்று இனி இல்லை. இலங்கையில் இனி இரண்டே இனம் தான். அது நாட்டுப் பற்றுள்ள இனம், நாட்டுப்பற்றற்ற இனம் என்று மேடைகளில் கம்பீரமாக அறிக்கைவிடும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் அண்மைக்காலமாக நடைபெறும் இந்த இனவாத அடக்குமுறைகள் பற்றிக் கேள்விப்படுகிறாரோ தெரியவில்லை.

அண்மைக்காலமாக பல இடங்களில் இரவோடு இரவாக புத்தர் சிலைகள் வைக்கப்பட்ட செய்திகளை அடிக்கடி கேள்விப்படக்கூடியதாக இருந்தது.

கடந்த மே மாதம் மட்டக் களப்பு மாநகரசபைக்குட்பட்ட பிள்ளையாரடியில் புத்தர் சிலை ஒன்று அமைப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சி பிரதேசவாசிகளாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் சிலராலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையால் தடுத்து நிறுத்தப்பட்டது.

அதேபோன்று யாழ்ப்பாணம் குருநகர் மடத்தடிப் பகுதியில் கடந்த வெசாக் தினத்தன்று இராணுவத்தினரால் புத்தர் சிலை வைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பிரதேசவாசிகளின் எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது.

இவ்வாறு சில சமயங்களில் புத்தர் சிலை வைப்பது தடுத்து நிறுத்தப்பட்ட போதும் பல சந்தர்ப்பங்களில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டதை தடுத்து நிறுத்த முடியாமல் போவது கவலைக்குரியதாகவே உள்ளது.

இவ்வாறான ஒரு சம்பவம் தான் கடந்த 30 ஆம் திகதி வாழைச்சேனையில் பதிவாகியது.

வாழைச்சேனை ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவில் உள்ள பிறைந்துறைச்சேனை அல் அஸ்கர் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இரவோடு இரவாக புத்தர் சிலையொன்று முளைத்துள்ளது.

வாழைச்சேனை புத்த ஜயந்தி விகாரைக்கு அருகில் உள்ள அல் அஸ்ஹர் வித்தியாலயம் மற்றும் சாதுலியா வித்தியாலயம் என்பவற்றுக்குப் பொதுவாக உள்ள விளையாட்டு மைதானத்திலேயே இரவோடு இரவாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்வுகள் இம்மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றன. இவ்வாறிருக்க, கடந்த 2010 மார்ச் மாதம் 1 ஆம் திகதி மைதானத்துக்கு அருகில் உள்ள புத்த ஜயந்தி விகாரையின் விகாராதிபதி மைதானத்தின் சுற்று மதிலை உடைத்து விட்டு இது விகாரையின் காணி என்றும், இதில் வெளியாட்கள் யாரும் இனி விளையாட வரக்கூடாது என்றும் உத்தரவிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து பாடசாலை நிர்வாகத்தால் இவ்விடயம் தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டது. கடந்த மாதம் 25 ஆம் திகதி மைதானம் பாடசாலைக்குரியது என்று நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

இருந்த போதும் வாழைச்சேனை புத்தஜயந்தி விகாரையின் விகாராதிபதி நாவானே அபயவன்ச அலங்கார தேரர் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொருட்படுத்தாமல் கடந்த முப்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவோடு இரவாக மைதானத்தில் ஒரு மேசையின் மீது புத்தர் சிலையை வைத்துள்ளார்.

கடந்த யுத்த காலத்தின்போது விகாரையின் காணிகளை முறையாக பராமரிப்பு செய்ய முடியாமல் போனதால் தற்போது பாடசாலை மைதானம் என்று குறிப்பிடப்படுவதாகவும். விகாரைக்கு தற்போது குறைவான காணியே உள்ளதாகவும், இது முஸ்லிம்களுக்கு எதிரான போராட்டமல்ல புத்த ஜயந்தி விகாரைக்கான காணியை மீட்கும் போராட்டமாகும் என்றும் புத்தஜயந்தி விகாரையின் விகாராதிபதி நாவானே அபயவன்ச அலங்கார தேரர் புத்தர் சிலை வைப்பிற்கான காரணத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கௌதம புத்தர் நாட்டைத்துறந்து, அரசாட்சியைத் துறந்து அனைத்து உலக இன்பங்களையும் களைந்து துறவறம் பூண்டவர். அவர் வழியில் வந்தவர்கள் நில ஆக்கிரமிப்பிற்கும் அபகரிப்பிற்கும் அவர் சிலையை பயன்படுத்துவதை என்னவென்று சொல்வது?





பஹ்முனா அஸாம்

# 13 ஆம் திருத்தச்சட்டம் தொடர்பில் இ.தொ.கா.வின் நிலைப்பாடு என்ன?

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தினை வலுவிழக்கச் செய்வதற்காக 19 ஆவது திருத்தத்தில் மாற்றத்தினை கொண்டுவருவதற்காக மாகாண சபைகளின் அங்கீகாரத்தைப் பெற வேண்டிய சூழ்நிலையில் அரசு காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் இதுவரை ஐந்து மாகாண சபைகள் 13 ஆவது திருத்தத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருக்கின்ற போதும் இன்னும் கிழக்கு மாகாணசபையின் ஆதரவை மட்டுமே அரசு பெறவேண்டியுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் கிழக்கு மாகாணசபைக்கு அப்பால் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மிக முக்கியமான கட்சியான இ.தொ.கா. மாத்திரமே 3 மாகாணசபைகளில் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

சப்பிரகமுவ மாகாண சபையில் இருவரும், மத்திய மாகாண சபையில் நால்வரும், ஊவா மாகாண சபையில் ஒருவருமாக மொத்தமாக 7 மாகாணசபை உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் இருவர் மாகாண அமைச்சர்களாகவும் காணப்படுகின்றனர்.

மாகாண சபை உருவாக்கப்பட்ட காலம் முதல் இந்த மாகாணசபைகளில் மலையக மக்கள் சார்பாக அதிகமான உறுப்பினர்களைக் கொண்டு மாகாண அமைச்சுப் பதவிகளையும் வகித்து வருவது இ.தொ.கா. மாத்திரமேயாகும். வட-கிழக்கு மக்களுக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13 ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும் இந்த மாகாணசபை முறை மூலமாக மலையக மக்கள் கணிசமான நன்மைகளை அடையக்கூடிய வாய்ப்பு காணப்பட்டது. பெரும்பாலான அடிப்படை அரச சேவைகள் மாகாண சபைகளின் கீழ் வருவதால் கணிசமான மாகாணசபை உறுப்பினர்களை மலையகம் கொண்டிருந்தமையினால் அந்த சேவைகளை மக்கள் இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

மலையக கல்வித்துறையில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியது மாகாண கல்வி அமைச்சேயாகும். அதேபோல் தோட்டப்புறங்களில் அடிப்படை வசதிகளின் மேம்பாட்டுக்கு மாகாணசபைகள் கணிசமான பங்களிப்பை வழங்கியிருக்கின்றது. மலையக மக்களில் கணிசமானோருக்கு அரச வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டதும் மாகாணசபைகள் ஊடாகவே என்பதை மறுப்பதற்கில்லை. ஆக சிறுபான்மை மக்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் மூலம் மலையகம் உரிய பயனை பெற்றிருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே இவ்வாறு மலையக மக்களுக்கு நன்மையை ஏற்படுத்திக் கொடுத்த மாகாண சபையை வலுப்படுத்த வேண்டும் என்பதே மலையக மக்களில் பெரும்பாலானோரின் கருத்தாக உள்ளது. ஆனால் இந்த மாகாண சபைகளின் திருத்தச்சட்ட விவகாரத்தில் இ.தொ.கா.வின் நிலைப்பாடு என்ன என்பது புரியாத புதிராகவே உள்ளது. ஒன்று நேரடியாக ஆதரிக்க வேண்டும். அல்லது எதிர்க்க வேண்டும். ஆனால் அதை விடுத்து திரைமறைவில் செயற்பட்டு வந்தால் யாருக்கு என்ன பயன் ஏற்படப்போகின்றது?

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக முதலில் கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் மாகாணசபைகளில் எந்தவொரு மாற்றம் கொண்டுவந்தாலும் அது மலையக மக்களுக்கு பயன்தரப் போவதில்லை எனவும் மாகாண சபைகள் ஊடாக கல்வி அபிவிருத்தி மட்டுமே மலையகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் ஏனைய அனைத்தும் மத்திய அரசாங்கத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது என்றும் கூறியிருந்தார். ஆனால் தற்போது 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினால் மலையக மக்களுக்கு இருக்கும் பாதிப்பு என்ன? நன்மை என்ன? என்பது பற்றி கட்சியின் உயர் மட்டம் தற்போது ஆராய்ந்து வருவதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார். மறுபக்கம் மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாண சபைகளில் 13 ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமான பிரேரணை வாக்கெடுப்பிற்கு வந்தபோது இ.தொ.கா. உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. இதற்கான காரணமாக இ.தொ.கா. உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கவில்லை என கூறுகின்றனர்.

இது சாக்குப் போக்கான பதில் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் குறித்த பிரேரணையில் இ.தொ.கா. கலந்துகொள்ளாமை என்பது குறித்த பிரேரணைக்கு எதிர்ப்பை காட்டியுள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது. காரணம் குறித்த மாகாண சபைகளில் ஆளும் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் காணப்படுவதால் தம்மால் எதுவும் சாதிக்க முடியாது என்று கருதியிருக்கலாம்.

மறுபக்கம் ஆளும் கட்சியில் தெரிவுக்குழுவில் இடம்பெற்றிருக்கின்ற அனைவரும் அரசின் கருத்தை பிரதிபலிப்பவர்களும், அரசின் நோக்கத்தை அடைய உதவி புரிபவர்களும் மாத்திரமே இணைந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

13 ஆவது திருத்தத்தில் மாற்றங்களைக் கொண்டுவர எதிர்ப்புத் தெரிவிக்கின்ற ஆளும் கட்சியின் முக்கிய பங்கு வகிக்கின்ற அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, வாசுதேவ நாயணக்கார, திஸ்ஸவிதாரன, டி.யு.குணசேகர எவரும் உள்ளடக்கப்படவில்லை. மாறாக ஆளும் கட்சியின் தெரிவுக் குழுவில் சுதந்திரக் கட்சியினை பிரதிநிதித்துவத்திற்கு அப்பால் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு மாற்றத்தினை ஏற்படுத்த வழிகோலியவர்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, தினேஷ் குணவர்தன ஆகியோருக்கு கட்சிகளிலிருந்து வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் 13 ஆவது சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற ஆளும் கட்சியின் பங்காளி கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தெரிவுக் குழுவில் இடம்பெறவில்லை. மாறாக முஸ்லிம் மக்கள் சார்பாக அரசின் விசுவாசிகளான அமைச்சர் அதாவுல்லா, ரிசாட் பதியுதீன் ஆகியோர் மாத்திரமே இடம்பெற்றுள்ளனர்.

இவ்வாறு பார்க்கின்றபோது மலையக மக்கள் சார்பாக பாராளுமன்ற தெரிவுக்குழுவில் நியமனம் செய்யப்பட்டிருக்கின்ற பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் மாகாண சபைகளின் அதிகாரங்களை குறைக்கும் வகையில் திருத்தம் செய்யப்படவுள்ள அரசியலமைப்பின் 13 ஆவது. 19 ஆவது திருத்தங்களுக்கு ஆதரவு வழங்கக் கூடிய ஒருவராகவே கணிக்கப்படுகின்றார்.

ஆக இந்திய அரசுடன் நட்பு பாராட்டி வருகின்ற இ.தொ.கா. தற்போதைய இந்திய ஆளும் கட்சியான காங்கிரஸினால் உருவாக்கப்பட்ட மாகாண சபைமுறைகளை வலுவிழக்கச் செய்யும் சட்ட மூலத்திற்கு ஆதரவு அளித்து அரசுக்கு விசுவாசியாக செயற்படுமா? அல்லது எதிர்த்து இந்தியாவை குளிர வைக்குமா? என்ற கேள்வி முன்னே எழுகின்றது.

மேலும் இந்த நாட்டில் இருக்கின்ற அனைத்துச் சிறுபான்மையினருக்கும் அடிப்படை பிரச்சினை ஒன்றாகவே காணப்படுகின்றது. அத்தோடு வடகிழக்கு முஸ்லிம் மக்களை விட, ஒரு படி கீழேயே இருக்கும் அனைத்துச் சிறுபான்மை சமூகங்களையும் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டிய தார்மீக பொறுப்பு மலையக மக்களுக்கும் இருக்கின்றது.

ஆகவே மலையக மக்களின் சார்பில் தெரிவுக்குழுவில் பங்கெடுக்கின்ற இ.தொ.கா. எதிர்கால நலனை கருத்திற்கொண்டு முடிவெடுக்க வேண்டும். அது வரலாற்று தவறாக அமைந்துவிடக் கூடாது என்பதே மலையகத்தின் ஒரே எதிர்பார்ப்பு.

எஸ்.சந்திரமோகன்

# எதையும் சாதிக்க உன்னால் முடியும்




மூச்சு விடுபவன் எல்லாம் மனிதனல்ல, முயற்சி செய்பவனே மனிதன். உண்பதும், உறங்குவதும் மட்டுமல்ல வாழ்க்கை. நம்முடைய வாழ்க்கையினை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்காக ஏற்பட்ட போராட்டமே வாழ்க்கை.

எந்த ஒரு சூழ்நிலையிலும் முயற்சியின் முடிவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், முயன்றுகொண்டே இருக்க வேண்டும். வாழ்க்கையில் சாதிக்க வேண்டுமென்ற வெறி வேண்டும். அப்பொழுது தான் சலிப்பு, தோல்வி, குறைகள், வறுமை போன்ற தடைகள் நம்மை பாதிக்காது.

உன் வாழ்க்கையில் நீ ஒரு முடிவெடுத்தால் உன்னை திசைமாற்ற துடிக்கும் சில முட்கள் உன் பயணத்தில் உண்டு. அது எதுவாகவும் இருக்கலாம். உன் குடும்பத்தில் நிலை, பொருளாதாரம், நண்பர்கள் ஏன் உறவாகவும் இருக்கலாம். அதற்காக நீ மனம் சோர்ந்துவிடக் கூடாது. இடையூறுகளால் உன் பயணத்தின் வேகமும், வெறியும் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது உன் முதல் பொறுப்பு. மனதைச் சிதறவிடாமல் எவனுடைய பார்வை இலட்சியத்தின் மீது இருக்கிறதோ, அவன் வெற்றியைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறான். எதை அடைய வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, அதுவே நம் உள்ளத்தின் காட்சியாகிவிட வேண்டும். அதிலேயே மனம் பதிந்துவிட வேண்டும். சாதனை பெற வேண்டுமானால், சோதனை என்ற கடலைக் கடக்க வேண்டும். நீச்சல் தெரியவில்லை என்று விழித்தால் நீ வீழ்ந்துவிடுவாய். மாறாக போராடும் துணிச்சல் உனக்கிருந்தால் நீ வென்று விடுவாய்.

ஒன்றை நினைத்தால் அதை சாதித்துவிட வேண்டும். எந்த சூழ்நிலையிலும் மனத்தைரியத்தை இழந்துவிடக்கூடாது. எந்தவொரு வெற்றியும் சும்மா வந்துவிடுவதில்லை. எந்த ஒரு சாதனையும் காயங்கள் ஏற்படாமல் கனிந்து வருவதில்லை. சிராய்ப்புகள் உண்டாகாமல் மலையேற நினைப்பதும், சிரமப்படாமல் தேனெடுக்க விரும்புவதும் கோழைத்தனமான ஆசைகள். எறும்புகூட போராடித்தான் தம் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இளமையில் கொடிய வறுமையைச் சந்தித்த அன்றைய சிறுவனான அப்துல்கலாம் தான், பின்னர் கடலளவு விரிந்தும், இமயமாயும் உயர்ந்தும் நின்றார்.




சோதனைகளைத் துணிச்சலுடன் சந்திக்கின்றவன் சாதனைகளைப் படைக்கின்றான். சூழ்நிலைச் சூறாவளியை எதிர்த்தியங்க முனையும் போதுதான் புதிய சக்தியையும், உத்வேகத்தையும் நாம் பெற முடியும். ஆசைகள் இருந்தால் மட்டும் போதாது. அவைகளை அடைவதற்கான உறுதிப்பாடு வேண்டும். அந்த உறுதிப்பாட்டுடன் போராடிப் பெறுவதற்கான துணிச்சல் வேண்டும். இதற்கு மேல் எதுவும் முடியாது என்று நினைத்துவிட்டால் வாழ்க்கை அவ்வளவு தான். வெற்றிதான் விருப்பமென்றால் எந்த சூழலிலும் கலங்காதிரு.

உடலில் நோயே வராவிட்டால் நோய் எதிர்ப்பு சக்தியும் வராது. அதுபோல் உன் வாழ்க்கையில் சோதனையே வராவிட்டால், சாதனையும் மலராது. மனம் தளராதே உன் உழைப்பிற்கு பலன் கிடைக்கும். துன்பம் கண்ட நாட்களுக்கு நிகரான இன்பம் உன் வாழ்வில் வரும்.

## ஆறறிவு படைத்த மனிதன்

அரசர் பரிவாரங்களுடன் சென்று கொண்டிருந்த போது எங்கிருந்தோ வந்த ஒரு கல் அவர் தலையில் பட்டு காயம் ஏற்பட்டது.

வீரர்கள் உடனே நாலாபுறமும் சென்று ஒரு கிழவியைப் பிடித்து வந்தார்கள்.

கிழவி சொன்னாள், அரசே என் மகன் சாப்பிட்டு மூன்று நாள் ஆகிறது. அவனுக்காகப் பழம் பறிக்கக் கல்லை விட்டு எறிந்தேன். அது தவறி உங்கள் மேல் பட்டுவிட்டது.

இதைக் கேட்ட அரசர் மந்திரியிடம் உடனே கிழவிக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கச் சொன்னார். எல்லோருக்கும் ஆச்சரியம். காரணம் கேட்க அவர் சொன்னார்;

உணர்ச்சியே இல்லாத மரம் தன் மீது கல்லைவிட்டு எறிந்ததற்கு புசிக்கப் பழங்களைத் தருகிறது.

ஆறறிவு படைத்த - அதுவும் மன்னனான நான் தண்டனையா கொடுப்பது?

## கடவுள் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?

ஒரு ஆரம்பப்பள்ளி ஆசிரியை தன் மாணவர்களிடம் ஒரு கட்டுரை எழுதச் சொன்னார்.

தலைப்பு ''கடவுள் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்கள்'' என்பது.

ஆசிரியை அக்கட்டுரைகளை திருத்தும் பொழுது ஒரு கட்டுரையை படித்துவிட்டு கண் கலங்குகிறார், அதைக் கண்ட அவர் கணவர்,

என்ன ஆச்சு? ஏன் அழுகிறாய்? என்றார்.

என் மாணவன் எழுதிய இந்தக் கட்டுரையை படித்துப் பாருங்கள் என்று கொடுத்தார். அதில்,

கடவுளே, என்னை என் வீட்டில் இருக்கும் தொலைக்காட்சி பெட்டியைப் போல் ஆக்கிவிடு. நான் அதன் இடத்தைப் பிடிக்க வேண்டும். அதைப் போல் வாழ வேண்டும். எனக்கான இடம், என்னைச் சுற்றி எப்பொழுதும் என் குடும்பத்தினர், நான் பேசும் பொழுது அவர்கள் என்னுடைய பேச்சைக் கவனமாகக் கேட்க வேண்டும்.

அவர்களின் கவனம் என்னைச் சுற்றியே இருக்க வேண்டும். தொலைக்காட்சி ஓடாத பொழுதும் பெறும் சிறப்புக் கவனத்தை போல் நானும் பெற வேண்டும்.

அப்பா வேலை முடித்து வந்ததும் என்னுடன் விளையாட வேண்டும். அவர் களைப்பாக இருந்தால் கூட, அப்புறம் அம்மா கவலையாக இருந்தாலும் என்னை விரும்ப வேண்டும். என்னை விலக்கக் கூடாது. என் சகோதர சகோதரிகள் என்னுடன் விளையாட வேண்டும். சண்டையிட வேண்டும்.


என் குடும்பத்தினர் அனைவரும் என்னுடன் சில மணிகளாவது செலவிட வேண்டும். கடைசியாக ஒன்று நான் என் குடும்பத்தினர் அனைவரையும் எப்பொழுதும் மகிழ்விக்க வேண்டும். என் இறைவா நான் உன்னிடம் அதிகம் கேட்கவில்லை, நான் தொலைக்காட்சி பெட்டியைப் போல் வாழ வேண்டும் அவ்வளவுதான்.

இதை படித்துவிட்டு கணவர் சொன்னார், அந்தக் குழந்தை பாவம் என்ன? இந்தக் குழந்தையைக் கவனிக்காமல் இருக்கும் பெற்றோர் என்ன ஜென்மமோ?

ஆசிரியை தன் கணவரிடம் கூறினார், இந்தக் கட்டுரையை எழுதியது நம் மகன்.

# மது அற்ற மலையகத்தை உருவாக்குவோம்






மதுவற்ற மலையகத்தை உருவாக்கி மாணவர்களை எமக்கு ஒரு வளமான எதிர்காலத்தை உருவாக்கித் தாருங்கள் என்பதனை மையப் பொருளாகக் கொண்டு லுணுகலை பகுதி பாடசாலை மாணவர்கள் புகைத்தலுக்கும் மதுவுக்கும் எதிரான ஊர்வலம் ஒன்றினை அண்மையில் லுணுகலை நகரில் நடத்தினர்.

கால்நடை வள சமூக, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் அடாவத்தை பிரஜா சக்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் லுணுகலை இராமகிருஷ்ணா கல்லூரி மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தியிருந்தனர்.

லுணுகலை இராமகிருஷ்ணா கல்லூரிக்கு அருகாமையில் ஆரம்பித்த இந்த ஊர்வலம் லுணுகலை நகர பஸ் நிலையம் வரை சென்று பொதுக்கூட்டம் ஒன்றுடன் நிறைவுபெற்றது. இந்நிகழ்வில் லுணுகலை பொதுசுகாதாரப் பரிசோதகர், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர் ஆகியோர்கள் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

"மதுவை ஒழித்து மலையகத்தை காப்பாற்றுங்கள்", "மதுவில்லாத மலையகமே எங்கள் கனவு", "புகைத்தல் புற்றுநோயை உண்டுபண்ணும்", "வறுமையை ஒழிக்க மதுவை மறப்போம்" என்ற பதாதைகளை ஏந்திய வண்ணம் மாணவர்கள் சென்றதுடன், நகரில் உள்ள வியாபார ஸ்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் மாணவர்களினால் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இப் பேரணியில் கலந்துகொண்டிருந்த லுணுகலை இராமகிருஷ்ணா கல்லூரி மாணவரிடம் கருத்துக் கேட்டபோது, மலையகத்திற்கு பெரும் சவாலாக மாறியிருப்பது மதுவேயாகும். மதுவினால் மலையகத்தில் பல குடும்பங்கள் சீரழிந்துகொண்டிருக்கின்றன. இதனால் எம்மைப் போல் பல ஆயிரம் மாணவர்களின் வாழ்வும் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது. எமது பெற்றோர் மதுவுக்கு அடிமையாகியிருப்பதால் எமது வாழ்வும் பலியாக்கப்படுகிறது. தோட்டங்களில் வறுமைக்கு பிரதான காரணம் கணிசமானோர் மதுவுக்காகவும், புகைத்தலுக்காகவும், வெற்றிலை போடுவதற்காகவும் பெருந்தொகையான பணத்தை செலவு செய்வதேயாகும். எமது பார்வையில் மதுவும், புகைத்தலும் மலையக சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரும் சவாலாகவே மாறியிருக்கிறது. ஆகவே, அதில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்த புகைத்தலுக்கும் மதுவுக்கும் எதிரான பேரணியில் கலந்துகொண்டிருக்கின்றோம் எனவும் தெரிவித்தனர்.



இப் பேரணியை ஏற்பாடு செய்த பிரஜாசக்தி நிலையத்தின் இணைப் பாளர்களில் ஒருவரான ஜோர்ஜ் கருத்து தெரிவிக்கையில்; அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் ஆலோசனையின் பேரில் இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வருகின்றோம். மலையகத்தை மதுவின் பிடியில் இருந்து மீட்டெடுக்க இவ்வாறான விழிப்புணர்வுப் பேரணிகள் ஓரளவாவது தாக்கத்தை ஏற்படுத்தும் என நினைக்கின்றோம்.

லுணுகலையைப் பொறுத்தவரை தற்போது சட்டவிரோத சாராய விற்பனை அதிகரித்த வண்ணமே உள்ளது. இது அண்மைக்காலமாக இப்பகுதியில் பாரிய சமூக சீரழிவை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. இங்குள்ள தோட்டங்களில் ஒருசில சாராயக் கடைகளாகவே மாற்றம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்விடயம் சம்பந்தமாக நாம் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் கவனத்திற்குக் கொண்டுவரவுள்ளதுடன், அவர்கள் ஊடாக லுணுகலை பகுதி தோட்டங்களில் சட்டவிரோத சாராய விற்பனையை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

**லுணுகலை நிருபர்**

## உதயசூரியன் பயோடேட்டா


| | | |
|---|---|---|
| பெயர் | - | டக்லஸ் தேவானந்தா |
| பதவி | - | பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் |
| நண்பர்கள் | - | பதவிக்காக மஹிந்த அரசுடன் ஓடி வந்து ஒட்டிக் கொள்பவர்கள் (ம்....ம்....யார்-யார்?) |
| எதிரிகள் | - | என்னுடனும் அரசுடனும் எப்போதும் முட்டிக்கொண்டிருக்கும் அந்தக் கூட்டமைப்பினர் |
| ஒரே ஆசை | - | வடக்கில் தனிக் காட்டு ராஜாவாக இருப்பதற்கு (எங்கே இருக்க விடுறாங்க) |
| தனிக் கோபம் | - | என்னையும் இன்னும் சிலரையும்(?) விமர்சித்து பிழைப்பு நடத்தும் அந்த மின்னல் காரர் மீது. |
| பிடித்த விடயம் | - | அரசின் மனம் நோகாமல் நடந்து கொள்வது. (ஹி...ஹி... நிறையப் பேர் அப்படித் தானே நடந்துகொள்கிறார்கள்) |
| பிடிக்காத விடயம் | - | நான் பேசும் போது குறுக்கே பேசுவது |
| போக விரும்பாத நாடு | - | இந்தியா |
| சிறந்த நகைச்சுவை | - | தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை இந்தியா பெற்றுத் தருமென இன்னும் அவர்களை நம்பி ஓடுவது (என்ன செய்ய பழகிப்போச்சு) |
| தமிழ் மக்களுக்கு கூறுவது | - | பொறுமையாக இருங்கள் எமது ஜனாதிபதி உரிய தீர்வை பெற்றுத் தருவார் (எப்போது?) |
| தற்போதைய கனவு | - | வட மாகாண முதலமைச்சராவது |



(யாவும் கற்பனை)
**எம். தாசன்**





## கண்ணாமூச்சி










இந்தப் படத்திற்குப் பொருத்தமான கண்கள் எவை?

04



## சூப்பர் ரூப்பர்



ஒளிந்திருக்கும் முகம் எது, கண்டுபிடியுங்கள்!



a
தேவயானி



b
ஜோதிகா



c
டாப்சி




1. இது எந்தத் திரைப்படத்தின் காட்சி ?

### வெற்றிக்கு...

வேகம் வேண்டாம்; விவேகம் வேண்டும்!
சோம்பல் வேண்டாம்; உற்சாகம் வேண்டும்!
சுட்டித்தனம் வேண்டாம்; கெட்டித்தனம் வேண்டும்!
சோதனை வேண்டாம்; சிந்தனை வேண்டும்!
கோபம் வேண்டாம்; அன்பு வேண்டும்!
கவலை வேண்டாம்; முயற்சி வேண்டும்!

புதிர் BOX பகுதிக்கான உங்கள் விடைகளை 02 ஆம் பக்கத்தில் உள்ள எமது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

## வார்த்தைப் புதிர் - 65



### இடமிருந்து வலம்

01. நிதிநிலை அறிக்கை.
06. விழாவுக்கு வருபவர்கள் மீது தெளிப்பது.
05. பாம்பு என்றால் இதுவும் நடுங்குமாம்.
06. மாடு, குதிரையின் காலில் அடிக்கப்படும் செருப்பு.
07. மகாபலியை அழிக்க மஹாவிஷ்ணு எடுத்த அவதாரம்.
09. நடிகர் விஜய் நடித்த ஒரு படம்.
10. ஆசை.
12. ஒரு பறவை.
15. பொங்கலுக்கு முதல் நாள்.
16. முட்டுவது.
21. மேலே ஏறப் பயன்படுவது.
23. செஸ் தமிழ்ச் சொல்லில் கடைசி எழுத்தை காண வில்லை.
25. இது இருட்டறை என்பார்கள்.

### வலமிருந்து இடம்

04. நிறம் ஆங்கிலத்தில்.
13. ஆமாம் என்பதை சுருக்கி இப்படிச் சொல்லலாம்.
14. கண்.
18. வாகனம்.
20. நடக்கும் வழி.

### மேலிருந்து கீழ்

01. புளியங்கொட்டை அல்லது சோழி வைத்து ஆடும் விளையாட்டு.
02. இவர் ஒரு நடிகர்.
03. புத்திமான்... ஆவான்.
11. குடியிருப்போர் மாதாமாதம் தரவேண்டியது.
13. பெண் எதிர்ப்பதம்.
14. நடிகர் கமல் நடித்த படம் லேசாக கலைந்துள்ளது.
19. அன்பு.
20. நல்லது செய்பவர்களுக்கு இங்கே இடம் இல்லை. ஆனால் கடைசி எழுத்து இல்லை..
22. என்ன ஆங்கிலத்தில்.

### கீழிருந்து மேல்

08. ஆண் வாரிசு.
10. அன்பிற்கு உகந்தவர்.
17. நூறு இலட்சம்.
18. புண் ஆறினாலும் இது மறையாது.
24. இந்தியாவின் தேசிய விளையாட்டு.
26. இது ஒருபோதும் விவேகம் ஆகாது.




# மலசலகூட கதவென விமானத்தின் கதவை திறக்க முயன்ற அரசியல்வாதியின் மகன்

ஆசியாவில் ஆச்சரியத்தை நோக்கிய இலங்கையின் பயணத்தை சகலரும் கண்ணில் விளக்கெண்ணெயை ஊற்றி பார்த்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இலங்கை கிரிக்கெட் அணியின் ஏ பிரிவு வீரரொருவரின் செயற்பாடு வியக்க வைப்பதாகவே அமைந்துவிட்டது. அந்த வீரர் அரசியல்வாதியொருவரின் மகன் என்பதனால் அவருடைய அந்த சேஷ்டை இன்னும் பிரபல்யமாகிவிட்டது எனலாம்.

விமானம், சுமார் 35,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கின்றபோது போதையிலிருந்த அந்த கிரிக்கெட் வீரர் மலசலகூட கதவென நினைத்து விமானத்தின் கதவை திறந்துள்ளார். சக வீரர்கள் தடுத்தும் கேட்காமல் இவர் மீண்டும் மீண்டும் முயற்சித்துள்ளார்.

இவரது சேஷ்டை சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மட்டுமன்றி இலங்கை அரசியலிலும் பல்வேறு விமர்சனங்களை முன்வைப்பதற்கு வழிவகுத்துவிட்டன என்றால் அதில் தவறிருக்காது.

அவருடைய இந்த சேஷ்டையினால் விமானத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன் அதில் பயணம் செய்தவர்கள் தங்களுடைய உயிரை பலமுறை நாடிபிடித்து பார்த்து நிம்மதி பெருமூச்சு விட்டுக்கொண்டனர்.

பிரித்தானியா விமான சேவைக்கு சொந்தமான போயிங் 777 என்ற விமானத்தில் பயணம் செய்த பயணியான இவர் சென்.லூரக்காவிலிருந்து லண்டன் கெட்விக் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போதே இவ்வாறு கதவைத் திறக்க முயற்சித்துள்ளார்.

அந்த விமானத்தில் 229 பயணிகள் பயணம் செய்து கொண்டிருந்தனர். விமானம் பயணத்தை ஆரம்பித்த ஆறு மணிநேரத்திற்கு பின்னர் கதவுக்கு அருகில் சென்ற குறித்த வீரர் கதவை பலமுறை திறப்பதற்கு முயன்றுள்ளார்.

நிறைபோதையில் கதவிற்கருகில் நின்ற அவர் சில நிமிடங்கள் கதவை திறப்பதற்கு முயற்சித்து பார்த்தார் என்று விமானத்தில் பயணம்செய்த பயணியொருவர் தெரிவித்துள்ளார். நாங்கள் உயிர்களை கைகளில் பிடித்துக் கொண்டோம். எங்களுடைய மகள் கூச்சலிட்டாள், ஆரம்பத்திலிருந்தே அந்த குழுவினர் மதுவை அருந்திக் கொண்டிருந்தனர் என்றும் அந்த பிரயாணி தெரிவித்துள்ளார்.

விமானம், சென்.லூரக்காவிலிருந்து கெட்விக் விமான நிலையத்தை சென்றடைவதற்கு 8 மணித்தியாலம் எடுக்கும் என்பதுடன் விமானம் தரையிறங்குவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னரே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

போதையில் இருப்பதனை புரிந்து கொண்ட விமான பணியாளர்கள் அவரை ஒருவாறு ஆசனத்திற்கு அழைத்து சென்றுவிட்டனர். இதன் பின்னரே பயணிகள் பெருமூச்சு விட்டதுடன் விமானம் தரையிறங்கும் வரையிலும் இறைவனை மன்றாடி கொண்டிருந்ததாக மற்றுமொரு பயணி தெரிவித்துள்ளார்.

விமானத்தில் பயணிக்கும் ஒருவருக்கு விமானத்தின் கதவும் மலசலகூடத்தின் கதவும் தெரியாமல் இருப்பதற்கு சாத்தியமே இல்லை. அதுவும் அடிக் கொரு தடவை நாடுகளை சுற்றி வருகின்ற வீரர்களுக்கு விமான பயணமெல்லாம் அத்துபடியாகத்தான் இருக்கும்.

ஆனால், இந்த வீரரோ மலசல கூடத்தின் கதவென நினைத்தே தான் அந்த கதவை திறப்பதற்கு முயன்றதாக விமான பணியாளர்களிடம் தெரிவித்துள்ளமையினால் விமான கதவு விவகாரம் நகைச்சுவையான விடயமாகவே மாறிவிட்டது.

பயணியொருவர் என்னதான் முயற்சிகளை மேற்கொண்டாலும் விமானத்தின் கதவுகளை ஒருபோதும் திறக்கமுடியாது என்று விமானநிறுவனம் அறிவித்துள்ளது.

எனினும், அந்த வீரர் லண்டனில் இறங்கியபோது அவருக்கு எதிராக விமானநிலைய பொலிஸார் ஆக குறைந்த நடவடிக்கையேனும் எடுக்காமை விமர்சனத்திற்கு உட்படுத்தவேண்டிய விடயமாகும்.

இவ்வாறான நிலையிலேயே, விமானத்தில் மதுபோதையில் குழப்பத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் வீரர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் என்றும் வீரர் குற்றவாளி என உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வீரரின் பெயரை குறிப்பிடாது இலங்கை கிரிக்கெட் சபை அறிக்கையொன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கை வெளியான பல மணிநேரத்திற்கு பின்னர் மற்றுமொரு அறிக்கையை வெளியிட்ட இலங்கை கிரிக்கெட் சபை ரமித் ரம்புக்வெலவே விமானத்தின் கதவை திறக்க முயன்றார் என்றும் அவருக்கு எதிரான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் முகாமையாளரிடம் அறிக்கையொன்றை கோரியுள்ளதாகவும் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

நடுவானில் விமானத்தின் கதவை திறக்க முயன்ற அந்த வீரரான ரமித் ரம்புக்வெல ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெலவின் மகனாவார்.

நாடோடி

## "இது சின்ன விடயம்"

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இது ஒரு சின்ன விடயம் என்று கூறியுள்ளார்.

இது ஒரு சிறிய விடயமாகுமென அந்த விமான சேவை நிறுவனமே கூறியிருக்கின்றது. இந்நிலையில் இலங்கை ஊடகங்கள் இதை பெரிதுபடுத்தியிருக்கின்றன.

விமானத்தின் பின்னால் உள்ள கதவிற்கும் மலசலகூட கதவிற்கும் இடையில் இரண்டு மீற்றர் தூரம் கூட இல்லை. யாருக்கும் இவ்வாறான தவறுகள் இடம்பெறலாம். இதற்கு முன்னரும் இவ்வாறான தவறுகள் இடம்பெற்றிருக்கின்றன.



எதிர்காலத்திலும் இவ்வாறான தவறுகள் இடம்பெறலாம் என்று பிரித்தானிய விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கை கிரிக்கெட் முன்னெடுக்கின்ற விசாரணைக்கு நான் ஆதரவளிப்பேன் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# 13 இன் தலையெழுத்தை நிர்ணயிக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுமா?



இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வுகாணும் முயற்சி சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும் இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றதா? புலம்பெயர் அமைப்புகள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்கு தமிழர்கள் மத்தியில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டும் என்று சர்வதேச சமூகத்தை வலியுறுத்தி வருகின்றது. ஐக்கியநாடுகள் அமைப்பின் மேற்பார்வையில் சூடான் நாட்டில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தி தெற்கு சூடான் தனிநாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. அதுபோன்றதொரு ஏற்பாட்டைக் கொண்டுவரவே புலம்பெயர் அமைப்புக்கள் முயற்சிக்கின்றன.

இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் மாகாண மாகாணசபை முறைமை இனப்பிரச்சினைக்கு தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்காக இலங்கை அரசமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அச்சட்டத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த அரசியல் தீர்வு இனப்பிரச்சினைக்கு காணப்பட்டது. அதன்படி மாகாண சபைகளுக்கு காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களும் வழங்கப்பட்டன. இவை மாகாணசபை முறைமையில் இடம்பெறவுள்ளன. இப்போது 13 ஆவது சட்டத்திருத்தத்தையே நாட்டின் அரசமைப்பில் இருந்து முற்றாக நீக்கிவிடவேண்டும் என பெரும்பான்மை இன பேரினவாத அமைப்புக்கள் குரல் எழுப்பி வருகின்றன.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாக தேசிய சுதந்திர முன்னணியும் ஜாதிகஹெல உறுமயவும் அரசாங்கத்தை 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தையே இல்லாமற் செய்யும்படி அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றன. 13 ஆவது திருத்தத்தை முற்றாக நீக்கினால் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கவேண்டிவரும் என்ற அச்சம் காரணமாக, மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் சிலவற்றை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக இரண்டு மாகாணசபைகள் ஒன்றாக இணைவதற்கு வழிசெய்யும் அதிகாரத்தையும் காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களையும் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் இருந்து நீக்கி விடுவதற்கான நடவடிக்கை களை அரசாங்கம் எடுத்து வருகின்றது. அதனைவிட, 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் மேலும் திருத்தங்களைச் செய்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

31 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் 19 பேரை அரசாங்கம் நியமித்துள்ளது. எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 12 பேர் இனித் தான் இடம்பெறவேண்டும். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவுக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கப்போவதில்லை என்று அறிவித்துவிட்டது. 17 ஆவது திருத்தச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டு, சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு, சுதந்திர தேர்தல் ஆணைக்குழு ஆகியன நியமிக்கப்பட்டால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறுவது பற்றி யோசிக்கலாம் என்றும் ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்திருக்கிறது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறப் போவதில்லை என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பும் அறிவித்துவிட்டது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்துள்ள நிலையில் அத் தெரிவுக்குழு எடுக்கும் தீர்மானங்கள் ஒரு தலைப்பட்சமானதாகவே இருக்கும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை பதவி நீக்கம் செய்த பாராளுமன்றத் தெரிவுக்குழு போன்றே 13 ஆவது திருத்தச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கு உதவுவதாகவே புதிய பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயல்பாடு அமையும் என்பதே அவதானிகளின் கருத்து.

அறுபதாண்டுகளாக நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சி பண்டா-செல்வா உடன்படிக்கை, டட்லி-செல்வா உடன்படிக்கையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது அரசமைப்புத்திட்டத்தின் கீழான மாகாணசபை முறைமையையே இல்லாது ஒழித்துவிடும் கட்டத்தை அடைந்துள்ளது.

சாத்வீக போராட்டத்தின் விளைவாக உருவாகியவையே பண்டா-செல்வா, டட்லி-செல்வா உடன்படிக்கைகள் ஆகும். ஆயுதப் போராட்டத்தின் விளைவாக இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் உருவானதே 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான மாகாணசபை முறைமையாகும். 13 ஆவது சட்டத் திருத்தம் குறித்து சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டும் என்று அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாக உள்ள தேசிய சுதந்திர முன்னணியும் ஜாதிகஹெல உறுமய ஆகியன அரசாங்கத்திற்கு நெருக்குதல் கொடுக்க ஆரம்பித்துள்ளன. 13 ஆவது திருத்தத்தையே அரசமைப்பிலிருந்து தூக்கியெறிய வேண்டும் என்பதே இப்பேரினவாத அரசியல் கட்சிகளின் கோரிக்கையாகும்.

அவ்வாறான சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை அரசாங்கம் நடத்த முடிவுசெய்யின் விளைவு எவ்வாறானதாக அமையும்? 13 ஆவது திருத்தத்தை வைத்திருப்பதா? அல்லது தூக்கி எறிவதா? என்பது பற்றி தேசிய ரீதியில் நடத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பின் முடிவுபற்றி நாட்டின் சிரேஷ்ட ராஜதந்திரியும் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையில் ஓர் அமைச்சராகவும் இருந்தவருமான தயான் ஜெயதிலகா கூறுவதைப் பார்ப்போம்.

“அவ்வாறான சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினால் எதிரணியில் உள்ள தமிழ்க்கட்சிகளும் ஆளும் அணியில் உள்ள தமிழ்க்கட்சிகளும் 13 ஆம் திருத்தத்தை ஒழிப்பதற்கு ஆதரவளிக்கப்படமாட்டாது. முஸ்லிம் அரசியல் கட்சிகளும் அதற்கு ஆதரவளிக்காது 13 ஆவது திருத்தத்தை இல்லாமற் செய்வதற்கு நாட்டின் தென்பகுதியில் உள்ள சிங்கள மக்கள் வாக்களிப்பர். நாட்டின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் 13 ஆவது திருத்தம் தேவை என்று வாக்களிப்பர். நாடு இரண்டு பிரிவுகளாக பிரிந்து சர்வசன வாக்கொடுப்பின்போது வாக்களிப்பின் சர்வதேச சமூகம் பிரிவுபட்ட இலங்கையையே காணும். இலங்கை அரசியல் வரைபடத்தில் இரண்டு நாடுகள் உள்ளன என்பதை சர்வசன வாக்கெடுப்பு எடுத்துக்காட்டிவிடாதா?” என்று தயான் ஜெயதிலக ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் எழுதிய கட்டுரையில் விவரித்திருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கு சர்வசனவாக்கெடுப்பு நடத்துவதுதான் சரியான பொறிமுறை என்று சர்வதேச சமூகம் கருதும் நிலையை நோக்கித்தான் நாடு சென்றுகொண்டிருக்கின்றது என்று கருதமுடியுமா?



அநாமிகன்

# 500 வருடங்களுக்கு முன் புதைக்கப்பட்ட சிறுமி



## அதிர்ச்சி தரும் உண்மைகள்

இறந்து 500 வருடங்களுக்கு மேலாகியும், இன்னும் உடலில் உள்ள இரத்தம் கூட உறையாத மூன்று மம்மிக்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆர்ஜென்டினாவின் லூல்லைலிகோ மலையில் கடந்த 1999 ஆம் ஆண்டு சுமார் 6739 மீற்றர் ஆழத்தில் மூன்று மம்மிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதில் ஒன்று சிறுமியுடையது. மதத்தின் பெயரால், பனியில் புதைக்கப்பட்ட இச்சிறுமிக்கு லாடென்சிலா, அதாவது திருமணமாகாத இளம் பெண் என ஆராய்ச்சியாளர்கள் பெயரிட்டுள்ளனர்.

மேலும் இன்கா இனத்தைச் சேர்ந்த இப்பெண் கடவுளுக்காக அர்பணிக்கப்பட்டு, கடவுளுடன் வாழ ஆசைப்பட்டு, மதத்தின் பெயரால் இந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த டென்சிலாவின் உடல்களில் பாகங்கள் எதுவும் கெட்டுப் போகவில்லையாம், இரத்தம் கூட உறையாத அளவிற்கு பதமாக பாதுகாப்பாக இருந்திருக்கின்றன. தோல் கூட புத்துணர்ச்சியுடன் இருப்பது தான் ஆச்சர்யம்.

இந்நிலையில் அவளது முடியை வைத்து, அவள் என்ன மாதிரியான உணவுப் பழக்க வழக்கக்களைக் கொண்டவள் என ஆராய்ந்ததில், இன்கா மக்கள் தங்கள் குழந்தைகளை நன்கு கொழுக்க வைத்து கடவுளுக்கு அர்ப்பணித்தது தெரியவந்துள்ளதாம்.

கடவுளுக்கு அர்ப்பணிப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே, விலங்கு கொழுப்புகள் மற்றும் தானியங்களைக் கொடுத்து அக் குழந்தைகளை நன்கு செழிப்பாக்குவார்களாம் அவர்கள் குடும்பத்தார்.

டென்சிலாவின் வயிற்றுப் பகுதியை ஆய்வு செய்தபோது, அவள் இறப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக ஏதோ காய்கறி போன்ற உணவை உட்கொண்டிருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

டென்சிலாவின் உடல் இருந்த நிலையை வைத்து பார்க்கும்போது, அவள் இறப்பதற்கு முன்னதாக ஏதேனும் மருந்து உட்கொண்டிருக்கலாம், அதன் மூலம் அவளது மரணம் நிகழ்ந்திருக்கலாம் என யூகிக்கின்றனர் ஆய்வாளர்கள்.


இன்காக்கள் இவ்வாறு அர்ப்பணிக்கப் பட்டவர்களை மலையின் உச்சிக்கு சுமந்து செல்வார்களாம்.

இலக்கை அடைந்தவுடன் குடிக்க ஒரு மருந்து திரவம் தரப்படுமாம். அதன் மூலம் வலி, பயம் மற்றும் எதிர்க்கும் மனோபாவம் இல்லாமல் போய்விடுமாம்.

பின்னர் அவர்களை உடன் சென்றவர்களே மூச்சுத் திணறச் செய்தோ, தலையில் ஓங்கி அடித்தோ அல்லது பனியில் உறைய விட்டோ பலி கொடுப்பார்களாம்.

நிறைய இன்கா குழந்தைகள் இதுபோல் திருவிழாவின் போதோ அல்லது சாதாரண நாட்களிலோ பலி கொடுக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.





## நாயாக மாறிய இளைஞர்




கலிகாலம் என்று சும்மாவா சொன்னார்கள். இப்படி எல்லாம் கூடவா நடக்கும் என எண்ணுமளவு உலகில் நம்ப முடியாத சம்பவங்கள் எல்லாம் நடக்கின்றன என்பதற்கு இந்த சம்பவம் ஒரு உதா[illegible]ம். நாய்கள் மீது கொண்ட அதிக பாச[illegible]ால் பிரேசிலை சேர்ந்த இளைஞர் ஒ[illegible]ருவர் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை மூலம் நாயாகவே மாறியுள்ளார்.

பிரேசிலை சேர்ந்த இந்த இளைஞருக்கு நாய்கள் என்றால் அதீத பிரியமாம். இதனால் பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை செய்து கொண்டு நாயாகவே மாறியுள்ளார். இறந்த நாய் ஒன்றின் முகத்தை இவருக்கு பொருத்தியுள்ளனர் மருத்துவர்கள். அறுவைச் சிகிச்சை முடிவடைந்துள்ள நிலையில் நாய் மனிதன் என்றே அனைவரும் அழைக்கின்றனர்.

## பெரிய குடும்பம்



ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்த காலமெல்லாம் மலையேறிவிட்டது. அமெரிக்காவில் சோல்ட் லேக் சிட்டியில் வசிக்கும் Joe என்ற நபர் ஒரே வீட்டில் 3 மனைவிகளுடன் வசித்து வருகிறார். மூன்று மனைவிகளும் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் இவருக்கு மொத்தம் 24 குழந்தைகள்.



## சாதனை மீசை

மீசையை வீரத்தின் அடையாளமாக கூறுவது உண்டு. ஆனால் இந்தி சினிமாக்களில் தாடி மீசை இல்லாத மொழு மொழு முக ஹீரோக்கள் வந்தபின் மீசைக்கு இருந்த மதிப்பு குறைந்து விட்டது. ஒரு சில பொலிஸ்காரர்கள் தான் இப்போது பெரிய அளவிலான மீசை வைத்திருக்கின்றனர். அதுவும் குற்றவாளிகளை பயமுறுத்துவதற்காக.

ஆனால் ராஜஸ்தானை சேர்ந்த 47 வயதான ராம்சிங் என்பவர் மீசையை தன் உயிரை விட மேலாக கருதி வளர்த்து வருகிறார். அவரது மீசையின் நீளம் என்ன தெரியுமா? கிட்டத்தட்ட 14 அடி. 1970 ஆம் ஆண்டிலிருந்து இந்த மீசையை அவர் வளர்த்து வருகிறார். இந்த 43 ஆண்டுகளில் மீசையை இவர் ஷேவ் செய்ததும் இல்லை. ட்ரிம் செய்ததும் இல்லை.

இவரது மீசைக்கு உலகின் மிகப் பெரிய மீசை என்ற கின்னஸ் அங்கீகாரமும் சமீபத்தில் கிடைத்திருக்கிறது. ராம்சிங் கூறுகையில்:- ஆரம்பத்தில் மீசையை பார்த்து என் மனைவி ஆத்திரம் அடைந்தாள். தினமும் வீட்டில் சண்டை நடக்கும். தற்போது இந்த மீசை உலக அளவில் பிரபலமாகி விட்டதால் இப்போதெல்லாம் என் மனைவிக்கு என்னை விட மீசையைத்தான் அதிகம் பிடிக்கிறது என்கிறார்.

# என்னாச்சி...!



## பட்டால்தான் புரியும்

நீக்குச்சி, சேப்டி பின், புறா இறகு, கோழி இறகு... என எதையாவது ஒன்றைக் கொண்டு அடிக்கடி என் அப்பா காது குடைவார். அத்துடன் குடையும்போது அரைக் கண்ணை மூடி, விழியைமேலே செருகி அதில் ஒரு ஆனந்தம் காண்பார். இப்படிப்பட்ட பழக்கம் மிகவும் கெடுதலாக முடியும் என பலமுறை நான் சொல்லிப் பார்த்தாயிற்று. கேட்கவில்லை. குடையும் போது உண்டாகும் சுகமே, ஆனந்தமே தனிதான் என்று லெக்சர் அடிப்பார். இந்த நிலையில் ஒரு நாள் வீட்டு வாசற்படியில் உட்கார்ந்து காதுகுடைந்துக் கொண்டிருந்தார். அப்போது வீட்டினுள்ளே இருந்து வந்த என் கடைசி மகன் அவர் கையை இடித்துவிட்டான். ஐயோ... என அலறிவிட்டார். நல்ல வேளையாக காது ஜவ்வுக்கு ஒன்றும் கெடுதல் ஏற்படவில்லை. உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று வைத்தியம் பார்த்தோம். அன்றில் இருந்து காது குடையும் பழக்கத்தையே விட்டுவிட்டார்.



## இது ரொம்ப தப்பு

நானும் என்னுடைய நண்பியும் அருகில் இருந்த கொமினிகேசனுக்கு சென்று 100 ரூபாய்க்கு ரிலோட் செய்யச் சென்றோம்.

மேலும் கொமினிகேசனில் கூட்டம் அதிகம். அத்தோடு பக்கத்தில் இருந்த வீடியோ கடையில் காதைக் கிழிக்கும் அளவுக்கு பாட்டுச்சத்தம் வேறு. கடைக்காரரிடம் சத்தம்போட்டு தன் மொபைல் இலக்கத்தை சொல்லி ரீலோட் செய்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டோம்.

அதன் பின் ஒரு ஒன்பது மணியில் இருந்து என்னுடைய நண்பியின் போனுக்கு அழைப்பு வந்தவண்ணம் உள்ளது.

அழைப்பில் உள்ளவர் மிகவும் மோசமான வார்த்தைகளில் வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசுகிறார். ஒரு கட்டத்தில் அவரின் அழைப்புக்கு அவள் பதில் கொடுக்கவில்லை. சைலன்ஸில் போட்டுவிட்டு தன் வேலையைத் தொடர்ந்தாள்.

இன்னும் சிறிது நேரத்தில் அவளுடைய போனுக்கு தேவையில்லாத எஸ்.எம்.எஸ். களும், வீடியோக்களும் வந்தன. அதிர்ந்து போனாள் என் நண்பி.

அந்த கொமினிகேசனில் மொபைல் இலக்கத்தைச் சொல்லும் போது அந்தக் கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவன்தான் இலக்கத்தை குறித்து வைத்துக் கொண்டு சேட்டை காட்டுகிறான் என்பது புரிந்தது.

ரீலோட் செய்ய வேண்டிய நம்பரை எழுதுவதற்கு ஒரு கொப்பி வைத்திருக்கும் கடைகளில் ரீலோட் செய்யுங்கள். வாய் மூலம் சத்தமாக இலக்கங்களை இனிச் சொல்லாதீர்கள்.



## நாங்களும் பார்க்கிறோம்!

நான் கொழும்பில் உள்ள அரசாங்க அலுவலகத்தில் வேலை செய்கிறேன். என்னுடைய கணவர் தனியார் கம்பனியில் வேலைசெய்கிறார்.

எனினும் எங்களுடைய மூன்று வயது குழந்தையை என்னுடைய அம்மா வீட்டில்தான் விட்டுவிட்டு வேலைக்கு செல்வோம். மாலை வரும்போது குழந்தையை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வருவோம்.

மேலும் குழந்தையின் நலன் கருதி வீட்டில் டி.வி. பார்ப்பதை குறைத்துக் கொண்டோம். அதற்கு பதிலாக சிறுவர் பாடல் சீடிகள் மற்றும் கார்டூன்கள் என்பவற்றைதான் நாங்களும் பார்ப்போம்.

இருப்பினும் நான் இரவில் மட்டும் ஒரே ஒரு நாடகம் பார்ப்பேன். அப்போது பக்கத்தில் குழந்தையும் இருந்தாள்.

நாடகத்தில் ஒரு பெண் ஆணுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். அதைப்பார்த்த குழந்தை பக்கத்தில் வந்து ''அம்மா இவள் லவ் பண்ணுகிறாளா? ஓடிப்போகப் போகிறாளா'' என்றாள். நான் அதிர்ந்து போனேன். இவ்வாறான வார்த்தைகள் எல்லாம் அவளுக்கு எப்படித் தெரியும் என்று ஆச்சரியப்பட்டேன்.

இன்னும் ஒருநாள் குழந்தை காலையில் ஒளிபரப்பாகும் சீரியலில் டைட்டில் பாடலை முணுமுணுத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போதுதான் எனக்கு புரிந்தது. தினமும் அம்மா வீட்டில் குழந்தை சீரியல்தான் பார்க்கிறாள் என்று.

குழந்தைகளுக்கு நல்லது கெட்டது தெரியாது. பெரியவர்கள் நாம்தான் அவர்களின் வழிகாட்டி. எனவே குழந்தைகளை வைத்திருப்போர் தொலைக்காட்சி பார்க்கும்போது அவதானமாக இருப்பது நல்லது.

நான் கொழும்பில் உள்ள ஒரு அலுவலகத்தில் வேலை பார்க்கிறேன். அதே அலுவலகத்தில் வேலைபார்க்கும் உறவினர் வீட்டில் அன்று ஒரு விசேஷம். எனவே அன்று நாம் இருவரும் அரைநாள் விடுமுறை எடுத்துக் கொண்டு அவரது வீட்டுக்குச் செல்லத் தயாரானோம்.

உறவினர் அலுவலகத்திற்கு பக்கத்தில் உள்ள கடைக்குச் சென்று அங்கிருந்த பெண்ணிடம் சில பொருட்களை வாங்கினார். அதே கடையில் பூஜைக்குரிய பொருட்கள் இருந்தும் வாங்காமல் பத்தடி தள்ளியிருந்த வேறு கடையில் வாங்கினார். காரணம் கேட்டதற்கு அவர் சொன்ன பதில் என்னை முகம் சுளிக்க வைத்தது. அந்தப் பெண் கணவனை பறிகொடுத்தவள் அவளிடம் எப்படி பூஜைக்குரிய பொருட்களை வாங்குவது? என்றார்.

எனக்கு சுர்ரென்று கோபம் வந்தது இருந்தும் உறவினர் ஆயிற்றே என வாயை அடக்கிக்கொண்டேன். இந்த 21ஆம் நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட மனிதர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கும்போது கவலையாக உள்ளது.



தகவல் தொகுப்பு
ஆர்.அபி

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

# வித்யாதரம்

கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

## வினாத்தாள் - 01

45 நிமிடம்


**பெற்றோர்களுக்கான அன்பான வேண்டுகோள் -**
**தங்கள் பிள்ளைகள் இவ் வினாப்பத்திரங்களுக்கு வீட்டில் இருந்து விடையளிக்கும் போது, மற்றவர்களின் உதவியின்றி சுயமாக விடையளிப்பதை உறுதிப்படுத்தி அவர்களின் கற்றலுக்கு உதவுங்கள்.**

★ **பின்வரும் உருக்களில் ஏதோ ஒன்று மற்றையதிலிருந்து வேறுபட்டதாகும். அவ்வுருவை தெரிவு செய்க.**

(01)



i.



ii.



iii.


(02)



i.



ii.



iii.

★ **சொற்கள் விபரிக்கும் பொருளைத் தெரிவு செய்க.**


(03) நிறையுணவு, பறவை, சுவை



i.



ii.



iii.


(04) அழகு, மென்மை, இதழ்



i.



ii.



iii.

★ **5ஆம் 6ஆம் வினாக்களில் முதலில் தந்துள்ள சொற்கள் இரண்டிற்கும் இடையில் ஏதோ ஒரு வகையில் தொடர்புண்டு. அதே போன்ற தொடர்பைக் காட்டும் வேறு இரண்டு சொற்களைத் தந்துள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்க.**

(05) பசிக்கு - உணவு
- i. தாகத்திற்கு - நீர்
- ii. இரவுக்கு - தூக்கம்
- iii. களைப்பிற்கு - வியர்வை

(06) கால் - செருப்பு
- i. தலை - முடி
- ii. விரல் - நகம்
- iii. தலை - தொப்பி

★ **பின்வரும் பாடலை வாசித்து 7ஆம் 8ஆம் வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

**கண்கவர் காட்சியதனை**
**கண்முன்னே கொண்டு வந்தே**
**காதவழியும் இன்பங் கொள்ளும்**
**காட்சி வானலையே!**

(07) இப்பாடலில் விபரிக்கும் சாதனம் எது ?
- i. வானொலி
- ii. தொலைக்காட்சி
- iii. கமெரா

(08) **'கண்கவர் காட்சி'** என்பதன் கருத்து
- i. கண்கண்ட காட்சி
- ii. கண்களுக்கு இன்பங் கொடுக்கும் காட்சி
- iii. கண்களைக் கவரும் காட்சி

(09) **'ஆழமறியாமல் காலை விடாதே'** எனும் முதுமொழி குறிப்பது

i. எதனையும் சரிவர ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

ii. ஆழத்தை காலைவிட்டு அறிதல் வேண்டும்.


iii. குளத்தின் ஆழத்தை சரிவர அளக்க வேண்டும்.

(10) சாந்தி சிறுவயதாக இருந்தாலும் எந்த விடயத்திலும் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறாள். இதனை விளக்கிக் கூறக்கூடிய பழமொழி

i. விளையும் பயிரை முளையிலே தெரியும்

ii. கடுகு சிறியதானாலும் காரம் பெரிது

iii. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை

(11)  முகம் பார்க்கும் கண்ணாடியில் கடிகாரம் தோன்றும் விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இக்கடிகாரத்தின் உண்மை நேரம் யாது?

i. 7.05

ii. 5.55

iii. 4.55

(12) சதுர வடிவக் காணி ஒன்றினைச் சுற்றி 40மின் கம்பங்கள் சரி சம இடைவெளிகளில் நடப்பட்டுள்ளது. ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும் போது , எத்தனை கம்பங்கள் காணப்படும்?

i. 10கம்பம்

ii. 9 கம்பம்

iii.11 கம்பம்

(13) 

□ + □ = 18 எனின் □ இன் பெறுமானம் யாது?

i. 3

ii.4

iii.6

★ **தரப்பட்டுள்ள வினாவில் பிழையான கருத்துக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.**

(14) i. கிளி பழம் தின்னும் அதன் சொண்டு வளைந்தது.

ii. பாம்பு விசமுள்ள பிராணி, அது மனிதனுக்கு நன்மை செய்யும்

iii. ஆமை நீண்டகாலம் வாழும், முட்டை இட்டு இனம் பெருக்கும்

(15) பின்வரும் வாக்கியத்திலே எதிர்காலத் தன்மை பன்மையைத் தெரிவு செய்க.

i. அவர்கள் வருவார்கள்

ii. நாங்கள் கடற்கரைக்குச் செல்வோம்

iii. நீங்கள் செல்வீர்கள்

★ **ஒரு கிழமையின் நாட்களில் ஒரு பண்ணையில் சேகரித்த முட்டைகளின் விபரம் தரப்படுகிறது. இத்தகவலைக் கொண்டு விடைகளைத் தெரிவு செய்க.**

| வாரநாட்கள் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| சேகரித்த முட்டை | 20 | 32 | ........ | 56 | 68 |

(16) அட்டவணையின்படி புதன்கிழமை சேகரித்த முட்டைகளின் எண்ணிக்கை

i. 44

ii. 36

iii. 48

(17) ஒரு முட்டை ரூபா6.50 எனின், திங்கள் சேகரித்த முட்டையின் மூலம் பெறப்பட்ட பணம் ?

i. ரூபா 125.00

ii. ரூபா 138.00

iii. ரூபா 130.00

★ **பின்வரும் பந்தியின் இடைவெளிக்குப் பொருத்தமான சொற்கள் இடம்பெற வேண்டியிருக்கின்றது. இதற்கமைய வினாக்களை அணுகி விடைகளைத் தெரிவு செய்க.**

**"அழகிய பரந்த மலை உச்சியிலிருந்து ............................ சலசல என்ற ஓசையுடன் வீழ்ந்து கொண்டிருந்தது. அந்த மலையைச் சுற்றியிருந்த அழகிய ...................... கண்களைக் கவர்ந்தன.**

(18) முதலாவது இடைவெளிக்குப் பொருத்தமான சொல் எது?

i. நீர்வீழ்ச்சி

ii.ஆற்றுநீர்

iii. மலைநீர்

(19) இரண்டாவது இடைவெளியில் வரவேண்டிய சொல் யாது?

i. மான்

ii. புல்வெளிகள்

iii. பறவைகள்

## வினாத்தாள் - 02 1 மணித்தியாலம் 15 நிமிடம்

பகுதி II

★ **கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு பாடலிலிருந்து விடை தருக.**

**இந்த உலகில் நீங்கள்**
**இயற்றும் தொண்டில் எல்லாம்**
**தந்தை தாயைப் பேணும்**
**தருமம் ஒன்றே பெரிது**

**கன்றை நினைந்தே உள்ளம்**
**கசியும் பசுவைப் போல**
**நன்றி புரிந்தோர் தம்மை**
**நாமும் நினைக்க வேண்டும்**

**பருவம் பார்த்து நாங்கள்**
**பயிரைச் செய்தல் போலக்**
**கருமந் தொடங்கும் போது**
**காலம் பார்க்க வேண்டும்.**

**வித்துவான் க. வேந்தனார்**

(அ) **" அறம்"** எனும் கருத்தை விபரிக்கும் சொல் ஒன்று தருக.

______________________

(ஆ) ஞாலத்தில் பெரிய தொண்டு எது எனக் கவிஞர் கூறுகிறார்?

______________________

(இ) இங்கு இடம்பெறும் உவமை ஒன்று எழுதுக.

______________________

(ஈ) உயர்திணை தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று தருக.

______________________

(உ) பசுவின் இளமைப் பெயர் யாது?

______________________

(ஊ) **" நாம் நினைத்தோம்"** என்பதை எதிர்கால ஒருமையில் எழுதுக.

______________________

(எ) உயர்திணை ஆண்பாற் பெயர்ச்சொல் எது?

______________________

(ஏ) கவிஞர் கன்றை யாருக்கு ஒப்புவமை செய்கிறார்?

______________________

(ஐ) **" பருவம் பார்த்து பயிர் செய்தல்"** என்பதற்குப் பொருத்தமான முதுமொழி ஒன்று தருக.

______________________

(ஒ) **' செயல்'** என்பதன் ஒத்த பதம் ஒன்று எழுதுக.

______________________

**(2) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்கி எழுதுக .**

(i) கடந்தான் / அங்கும் / வீதியைக் / கண்ணன் / இங்கும்/ பார்த்து

______________________

(ii) விடாதே / ஆழம் / காலை /அறியாமல்

______________________

**(3) பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

(i) இலவு காத்த கிளி போல

______________________

(ii) கண்ணும் கருத்துமாக

______________________

**(4) வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக .**

(i) எமது வயற் காணியினுள் ______________ படர்ந்து காணப்பட்டன.

( முள்செடிகள், முட்செடிகள், முல்செடிகள், முள்செடிகல்)

(ii) புலமைப் பரிசிலில் வெற்றி பெற நாம் ________ செய்ய வேண்டும்.
[ பயிற்சி, பயிர்ச்சி, பயிற்ச்சி, பயிட்சி ]

(iii) கலிலியோ கலிலி ________ யில் ஈடுபட்டார்.
[ஆராட்சி, ஆராய்ச்சி, ஆராச்சி, ஆராட்ச்சி]

**(5) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப் புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

(i) I am reading a book in the ________
(shop , Library, bookshop, post office)

**(ii) வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.**





________ ________

**(6) கருத்தினைத் தமிழில் எழுதுக.**

(i) Who are they ?

________

(ii) Don't go out ?

________

(iii) Very good ?

________

**(7) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது தமிழில் எழுதுக.**



ஒபட ஓனே மொனவாத?
..................................................

நங்கி வ[த்]துற (Dh) தென்ன
..................................................



**8 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

[8] மனதை ஒரு நிலைப்படுத்தும் படிமுறைகளில் நான்காவதாக இடம்பெறுவது
i. மலர்வு
ii. பிரார்த்தனை
iii. மனவுறுதி

[9] தண்டு கோதிப் புழுவினால் தாக்கப்படும் தாவரம்
i. கத்தரி
ii. குரக்கன்
iii. புடோல்

[10] **" ஆகாயத் தோட்டி"** என வர்ணிக்கப்படும் பறவை
i. கிளி
ii. மைனா
iii. காகம்

[11] உருவில் காட்டப்படும் கருவியின் பெயர் யாது?



i. திருகாணி செலுத்தி
ii. புரியாணி சாவி
iii. சுவராணி செலுத்தி

[12] நாய் கடித்த ஒருவருக்கு உடனடியாகச் செய்யக் கூடிய முத லுதவிச் சிகிச்சை
i. துணியால் இறுகக் கட்டுல்
ii. காயத்தைச் சவர்க்காரமிட்டுக் கழுவுதல்.
iii. ஏதாவது இலையை அரைத்துப் பூசுதல்.
iv. மஞ்சள் மாவை பூசுதல்

[13] பின்வரும் வானிலைக் குறியீடு புலப்படுத்துவது



i. மழை
ii. முகில்கூட்டம்
iii. புயல், இடி, மின்னல்
iv. இடி மின்னல்

[14] ஒரு உணவுப் பண்டப் பொதியைப் பிரித்து உண்பதற்கு முன் னதாகக் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம்
i. நிறை
ii. உற்பத்தி செய்த தினம்
iii. காலாவதியாகும் தினம்
iv. உற்பத்திக் கம்பனி

[15] இலங்கையின் கலாசார முக்கோண நகரங்களில் ஒன்று
i. கண்டி ii. யாழ்ப்பாணம்
iii. கொழும்பு iv. வவுனியா

[16] பின்வருவனவற்றுள் தேசிய அடையாளங்கள் அல்லாதது எது?
i. நாகமரம் ii. காட்டுக்கோழி
iii. நீலோற்பலம் iv. நிறைகலசம்

[17] கந்தளாய்க் குளத்தை கட்டுவித்த மன்னன்
i. தாதுசேனன் ii. மகாசேனன்
iii. இரண்டாம் அக்கபோதி iv. தேவநம்பிய தீசன்




# வெயில் காலத்தில் கண்களை பாதுகாக்க

பெண்களின் அழகிற்கு மேலும் அழகு சேர்ப்பது அவர்களின் கவர்ச்சியான விழிகள் தான். இந்தக் கண்கள் எமது சோகம், துக்கம், சந்தோஷம் போன்ற பல உணர்ச்சிகளை கண்ணாடியைப் போன்று பிரதிபலித்துக் காட்டக்கூடியவை. என்னதான் முகத்திற்கு நாம் மேக்கப் செய்தாலும் அதில் நாம் எமது கண்களுக்கு இடும் ஒப்பனை மிகவும் எடுத்துக்காட்டக்கூடிய ஒன்றாகும் என்கின்றார் நம் அழகியற் கலை நிபுணரான தனு ரசாக்.


தனு ரசாக்

சிலருக்கு கண்களைச் சுற்றி விரைவில் கருவளையம் தோன்றிவிடுகின்றது.


உருளைக்கிழங்கின் சாறு அல்லது வெள்ளரிக்காயை நறுக்கி, மூடிய கண்களின் மேல் வைத்து சிறிது நேரம் ஓய்வு எடுப்பதன் மூலம் கண்களின் சோர்வு நீங்கி, குளிர்ச்சி அடைந்து கருவளையங்கள் மறையும்.

கண்களைப் போலவே கண்களின் கவசமாக இருப்பவை தான் கண் இமையானது. இதற்கு விளக்கெண்ணெய் தினம் பூசி வர கண் இமைகள் மேலும் அழகாக வளரும். கண்களின் அழகை மெருகுபடுத்துவது புருவங்கள்தான். சிலருக்குப் புருவத்தில் முடியே இருக்காது. நிறமும் குறைவாக இருக்கும். தினமும் விளக்கெண்ணெயை எடுத்து, சூடு செய்து புருவத்தில் மசாஜ் செய்யலாம்.

அரை மணி நேரத்திற்குப் பின்பு வெதுவெதுப்பான நீரில் துடைத்துவிட வேண்டும். வாரம் மூன்று முறை இப்படிச் செய்வதன் மூலம் புருவத்தில் முடி கருகருவென வளரும்.

கண்ணில் விற்றமின் "ஏ "நிறைந்த கரட், முருங்கைக் கீரை போன்ற கீரை வகைகள், மீன், மீன் எண்ணெய், ஈரல், முட்டை, பால் ஆகியவற்றை உணவில் அதிகம் சேர்ப்பது கண்களுக்கு மிகவும் அவசியமானது.

அத்தோடு கடுமையான வெயிலில் பிரயாணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டால் தற்போது சந்தைகளில் விற்பனையாகும் தரமான சன்கிளாஸ்களை அணிந்து செல்லுங்கள். அவை உங்களது கண்களுக்கு மிகுந்த பாதுகாப்பையும் வெயிலினால் ஏற்படும் தாக்கத்தினையும் கட்டுப்படுத்தும் கவசமாக இருக்கும்.



## அழகுக் குறிப்புகள்



✱ பழுத்த வாழைப்பழத்துடன் பால் கலந்து முகத்தில் பூசுங்கள். முகம் பளபளக்கும்.

✱ பப்பாளிப்பழம், எலுமிச்சைச் சாறு கலந்து தடவவும். முகத்துக்கு நல்ல நிறம் கிடைக்கும்.

✱ ஒரேஞ்சு சாறை குளிர்சாதன பெட்டியில் வைத்து கட்டியாகி ஒரு வெள்ளை துணியில் கட்டிக்கொண்டு கண்களுக்கு மேல் ஒத்தி எடுக்கவும். கண்கள் குளிர்ச்சியாக இருக்கும்.

✱ வெள்ளரிக்காய் சாற்றில் முல்தானிமெட்டி, பால் சேர்த்து முகத்தில் பூசி பிறகு கழுவி விடவும். வெயிலில் கறுத்த முகம் பொலிவு பெறும்.

✱ தர்ப்பூசனிச் பழச்சாறு, பயற்றமாவு கலந்து முகத்தில் பூசினால், முகம் புதுப்பொலிவு பெறும்.

✱ தக்காளிப்பழத்தை முகத்தில், கைகளில் தடவி வரவும். கைகள் மிருதுவாக இருக்கும்.

இப்படி தினமும் 10 அல்லது 15 நிமிடங்கள் நம் அழகுக்காக ஒதுக்கிவைத்தால், வயதானாலும் இளமையாக இருக்கலாம்.

## தையல் பயிற்சி

# டொப் ஸ்டார் பொட்டம்

தேவையான அளவு
இடுப்பின் சுற்றளவு
உயரம்

தேவையான புடவையின் அளவும் மடிக்கும் முறையும்


60" அகலமான புடவை 1-3/4 மீற்றர் தேவைப்படும்.

உயரப்பகுதியில் 20 இஞ்ச் கூட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

உயரப் பகுதியை 2 பகுதிகளாகவும் அகலப் பகுதியை முக்கோணமாகவும் மடித்துக் கொள்ள வேண்டும்.



மடித்துக்கொண்ட புடவையை மேசையில் இட்டு முக்கோணப் பகுதியிலிருந்து கீழ் நோக்கி 11 குறித்து இடுப்புப் பகுதியை வெட்டி எடுத்துக்கொள்ள வேண்டும்.



✱ காலின் வாட்டிப் பகுதியை வெட்டி எடுத்துக்கொள்ள வேண்டும்.

✱ கால் சுற்றளவுக்கு 1/4 இஞ்ச் இலாஸ்டிக் இட வேண்டும்.



✱ இடுப்பிலிருந்து கீழ்நோக்கி 8 இஞ்ச் குறித்து பொக்கெட் வைத்துக்கொண்டால் அழகாக காணப்படும்.



தையல் கலையின் பரிமாணங்கள்

தருபவர் :
திருமதி.ராஜேஸ்வரி குமார் - பண்டாரவளை

## பாடல்



படம் : பரதேசி
இசை : பிரகாஷ் குமார்
பாடியவர்கள் : யாசின், வந்தனா சீனிவாசன்
வரிகள் : வைரமுத்து

அவத்த பையா செவத்த பையா
அழிச்சாட்டியம் ஏனடா
கவச்சி மேலே ஆசப்பட்ட
கரிச்சாங்குஞ்சு நானடா
சொட்டையில் பெஞ்ச
சிறுமழை போல
நெஞ்சு கூட்டுல நெறைஞ்சிருக்க
கஞ்சியில் கரைஞ்ச உப்புக்கல்லு
போல
கண்ணு கூட்டுல ஒளிஞ்சிருக்க
நம்ம பூமி வரண்டிருக்கு
உன் நாக்கு ஈரம் பட்டு வாழ்க்கை
நனைஞ்சிருக்கு

அவத்த பொண்ணே செவத்த
பொண்ணே அழிச்சாட்டியம் ஏனடி

வெந்நி தண்ணி காச்சவா உன் மேலு
காலு ஊத்தவா
காச்சு போன கையில உன் காஞ்ச
மூஞ்சி தேய்க்கவா

கொட்டான் குச்சியில் மேலு தேய்ச்சி
குளிக்க வையடி
ஏ அக்குள் பக்கம் மக்கபோரு ஆகுதே
நீ தள்ளி நில்லடி ஆறாதடி தொடாதடி

(அவத்த பையா செவத்த பையா)

கூத்து பாக்க போகலாம் கூட வாட
வாரியா
சொல்லு பேச்சு கேக்குறேன்
கொஞ்சம் நெல்லு சோறு தாறியா

எள்ளு போட்ட ஈசல் தாறேன் உன்ன
தருவியா
நான் முந்தி போட்ட மூடி வச்சு பூக்கள
நீ மோந்து பாத்தியா
முத்தாடையா முட்டா பையா

அவத்த பொண்ணே செவத்த
பொண்ணே
அழிச்சாட்டியம் என்னடி
இழுத்து வச்சு கழுத்தருக்க இளிச்ச
வாயன் நானடி
கயித்த அறுத்த கன்னுக்குட்டி போல
சித்தன் போக்கில் நான் அலைஞ்சேன்
கருவா சிறுக்கி சீலையில் இறுக்கி
கட்டி போட்டு சிரிக்கிறியே
உன் சூழ்ச்சி பலிச்சிருச்சே
நெல்லு சோத்து பானைக்குள்ளே
பூனை விழுந்திருச்சே



## சான்ஸ் கேட்டு நடையாய் நடக்கும் திருட்டுப்பயலே ஜீவன்!

திருட்டுப்பயலே, நான் அவனில்லை போன்ற ஹிட் படங்களில் நடித்தவர் ஜீவன். அந்தப் படங்களின் வெற்றியால் உச்ச நடிகர் பட்டியலை நோக்கி சென்று கொண்டிருந்தார் அவர். அவரைத் தேடி படாதிபதிகளும் படைப்பாளிகளும் படையெடுக்கத் தொடங்கினர்.

இதனால் வெற்றிக்களிப்பில் புதுப்புது கண்டிசன்களை போடத் தொடங்கினார் ஜீவன். குறிப்பாக கதைகள் கேட்டபிறகு இந்தப் படம் ஜெயிக்குமா? தோற்குமா? என்பதை முன்கூட்டியே அறிய அவர்களின் ஜாதகங்களை வாங்கி தனது ஜோசியரிடம் காண்பித்த பின்னரே முடிவு சொன்னார். அதனால் பல நல்ல படங்களை இழந்தார். அதோடு கடைசியாக கவிதாலயாவுக்காக அவர் நடித்த கிருஷ்ணலீலை படம் பல ஆண்டுகளாகியும் இன்றுவரை ரிலீசாகவில்லை. அதனால் அந்த படத்தோடு ஜீவனை மூட்டைகட்டியது கோடம்பாக்கம். மற்றவர்களின் தலையெழுத்தை ஜாதகம் பார்த்து தெரிந்து கொண்ட நான் என்னுடைய தலையெழுத்து என்னவென்று பார்க்க தவறி விட்டேனே என்று தற்போது புலம்பிக்கொண்டு திரிகிறார். மேலும் மீண்டும் சினிமாவில் தலைதூக்கும் முயற்சியில் இறங்கியிருப்பவர், சில புதுமுக டைரக்டர்களை அணுகி தன்னை ஆதரிக்குமாறு நடையாய் நடந்து கொண்டிருக்கிறார்.

### கிரிக்கெட்டில் வில்லன் திரையில் ஹீரோ!!

ஐ.பி.எல் கிரிக்கெட் விளையாட்டின்போது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டார் ஸ்ரீசாந்த். சிறைவாசம் மேற்கொண்ட ஸ்ரீசாந்த் தற்போது ஜாமீனில் வெளியே வந்து விட்டார்.

இதைத் தொடர்ந்து சினிமாவில் ஹீரோவாக ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

பிக்பொக்சர் என்ற படத்தில் ஸ்ரீசாந் ஹீரோவாக ஒப்பந்தமாகியிருக்கிறார். தமிழ், மலையாளத்தில் உருவாகும் இப்படத்தில் பிரபுதேவா, பிரகாஷ்ராஜ் ஆகியோரும் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்களாம்.

## 42 மனைவிகளுடன் வடிவேலு

திரையுலகிற்கு ரீ-எண்ட்ரி கொடுத்துள்ள வடிவேலு நடித்து வரும் புதிய படம், ஜெக
புஜபல தெனாலிராமன். இதில் தெனாலிராமன் கெட்டப்பில் வடிவேலு நடித்த முதல் காட்சி
படமாக்கினர். இக்காட்சியில் அவருக்கு 42 மனைவிகளும், 56 பிள்ளைகளும் இருப்பது போ
காட்சியை கதாபாத்திரங்களை வைத்து படமாக்கி உள்ளனர்.



## அமலா பாலை
### கண்டுகொள்ளாத
### விஜய்

ஒரு படத்தில் இணைந்து
நடிக்கும் நடிகர், நடிகைகள் அடுத்த
படத்தில் இணைந்தாலோ அல்லது
நிகழ்ச்சிகளின் போதோ சந்தித்து
கொள்வார்கள். ஆனால், இந்த
விடயத்தில் அமலா பால் புதுவித
பாணியை பின்பற்றி வருகிறார்.
ஒரு படத்தில் இணைந்து
நடித்த பிறகு, அந்த நாயகர்களுடன்
முக்கியமாக அவர்களின் வீ
வளர்த்து கொள்வதுடன், அவ்வப்
போது விசிட் அடிப்பாராம்.
ஆனால் சில முன்னணி
அனுமதிக்காத போது, சென்ன
ஹோட்டலுக்கு அழைத்து வி
இருப்பினும், சமீபத்தில்
நடித்த விஜய்க்கு பல தடவை
கண்டுகொள்ளவே இல்லை
இதனால் தனக்கு
சொல்லி புலம்பிக் கொண்




## மீண்டும் வரும் பூர்ணா மறுபடியும் பேசப்படுவாரா?

கவர்ச்சிகரமான அழகு. ஓரளவு நடிப்பு என எல்லாம் இருந்தும் பெரிய அளவில் பார்க்கப்படாதவர் இந்தப் பூர்ணா, தற்போது படம் பேசும் மூலம் ரீ எண்டரி கொடுக்கிறார்.

முனியாண்டி விலங்கியல் மூன்றாமாண்டு மூலம் தமிழுக்கு வந்தவர் இந்த கேரளத்து பூர்ணா.

கடைசியாக அவர் தலை காட்டிச் சென்றது வித்தகன், பார்த்தீபனுடன். இடையில் என்ன ஆனார் என்பது தெரியவில்லை. ஆனால், இப்போது மீண்டும் படம் பேசும் உள்ளிட்ட சில படங்கள் மூலம் மறுபடியும் தரிசனம் தர வருகிறார்.





## இனிமேல் வருஷத்துக்கு 2 படங்கள் தான்: விமல்

சரிந்து கொண்டிருக்கும் தனது மார்க்கெட்டை தூக்கி நிறுத்த அதிரடியான முடிவை எடுத்துள்ளாராம் விமல். கூத்துப் பட்டறையில் இருந்து வந்த விமல் மற்றும் விதார்த்தின் மார்க்கெட் சொல்லிக் கொள்ளும்படி இல்லை.

ஆனால், விஜய் சேதுபதி மற்றும் சிவகார்த்திகேயனின் மார்க்கெட்டோ எகிறிக் கொண்டிருக்கிறது. கேடி பில்லா கில்லாடி ரங்கா படத்தில் நானும் தானே நடித்தேன். அப்படி இருக்கையில் இந்த சிவகார்த்திகேயனுக்கு மட்டும் எப்படி பெயர் கிடைத்தது என்று புலம்பித் தள்ளுகிறாராம் விமல்.

இதனால் இனி கண்ட கம்பெனிகளின் படங்களில் எல்லாம் நடிக்கக் கூடாது என்று முடிவு செய்துள்ளாராம்.

ஆண்டுக்கு 2 படங்கள் அதுவும் பெரிய இயக்குநர், பெரிய நிறுவனத்தின் படங்களில் மட்டும் தான் நடிப்பது என்று தீர்மானித்துள்ளாராம்.





வில்லன் வேடங்களில் நடிக்க தயாராகும் மனோஜ்!

டைரக்டர் அமீர்-இனியா, லட்சுமண்-கார்த்திகா ஜோடியை வைத்து பாரதிராஜா ஆரம்பித்த படம் அன்னக்கொடியும் கொடிவீரனும். ஆனால் படத்தின் பூஜையை மதுரையில் விமரிசையாக நடத்தியவர் பின்னர் திடீரென்று அமீரை படத்திலிருந்தே நீக்கினார். அதையடுத்து அவருக்கு ஜோடியாக நடிக்கவிருந்த இனியாவ்வையும் வெளியேற்றினார். பின்னர் கதையில் திருத்தம் செய்த பாரதிராஜா தனது மகன் மனோஜை களத்தில் இறக்கினார். ஹீரோவாக இல்லாமல் வில்லனாக மாற்றினார். அதோடு படத்தின் தலைப்பையும் அன்னக்கொடி என்று மாற்றினார். தற்போது வெளியாகியுள்ள அப்படத்தில் லட்சுமண் ஹீரோவாக இருந்தபோதும், கதையின் முக்கிய பகுதி மனோஜ்-கார்த்திகாவை சுற்றியே பின்னப்பட்டுள்ளது. இதனால் பெரும்பாலான காட்சிகளில் மனோஜே இடம்பிடித்திருந்தார். இதுபற்றி மனோஜ் கூறுகையில்; 7 வருடங்களுக்குப் பிறகு இப்போது நடித்துள்ளேன். இந்த கதாபாத்திரத்தை சொன்னதும் அதற்கேற்ப என்னை மாற்றினேன். ஆனால் யாரையும் ரோல் மாடலாக எடுத்துக்கொள்ளவில்லை. தொடர்ந்து வில்லன் வேடங்கள் வந்தாலும நடிப்பதற்கு தயாராக இருக்கிறேன் என்கிறார்.



## கமல் படத்தில் காஜல் நடிக்க மறுத்தது ஏன்?

நாயகிகள் அனைவருக்குமே முன்னணி நடிகர்களுடன் ஜோடி சேர வேண்டும் என ஆசைப்படுவதுண்டு.

அப்படி வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில், சம்பளத்தை பற்றி கவலைப்பட மாட்டார்கள்.

ஆனால், காஜல் அகர்வாலோ அதற்கு நேர்மாறாக இருக்கிறாராம், சம்பள விடயத்தில் மிகவும் கறாராக இருக்கிறாராம்.

சமீபத்தில் கமல்ஹாசனின் புதிய படமான உத்த வில்லன் படத்தில், கமலுக்கு நாயகியாக நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், அவர் எதிர்பார்த்த சம்பளத்தை தயாரிப்பாளர் கொடுக்க முன்வரவில்லை. இதையடுத்து கமல்ஹாசன் படத்தில் நடிக்க காஜல் அகர்வால் மறுத்துவிட்டார்.

ா தொடர்பில் இருப்பாராம்.
டுக்குச் சென்று புது நட்பை
போது ஓய்வுகள் கிடைக்கும்

ஹீரோக்கள் வீடு வரைக்கும்
ா வந்தால் நட்சத்திர
ந்து அளிப்பாராம்.
் தன்னுடன் இணைந்து
் அழைப்பு விடுத்தும் அவர்
ாம்.
நெருக்கமானவர்களிடம்
ிருக்கிறாராம் அமலா பால்.



## நடிகர் ஆகாமல் இருந்திருந்தால்...! தனுஷ்

நான் நடிக்க வராமல் இருந்திருந்தால் சமையல் கலைஞராகி இருப்பேன் என்று தனுஷ் தெரிவித்துள்ளார். இயக்குநர் கஸ்தூரி ராஜா வீட்டில் இருந்து நடிக்க வந்தவர் தனுஷ். அவர் இன்று பெரிய ஹீரோவாகிவிட்டார். தமிழில் பெரிய ஹீரோவாக உள்ளவர்களால் கூட பாலிவுட்டில் பெயர் எடுக்க முடியவில்லை. அப்படி இருக்கையில் அவர் தனது முதல் இந்திப் படத்திலேயே பாலிவுட்டை தன்னைப் பற்றி பேச வைத்துவிட்டார்.

அவரது இந்திப் படமான ராஞ்ஹனாவின் தமிழ் டப்பிங்கான அம்பிகாபதியும் தமிழ் ரசிகர்களால் வரவேற்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தான் நடிகர் ஆகாவிட்டால் என்னவாகி ஆகியிருப்பேன் என்று தனுஷ் தெரிவித்துள்ளார்.

# சினிமா



## பாடல்

படம்: தசாவதாரம்
பாடல்: வைரமுத்து
பாடியவர்: ஹரிஹரன்
இசை: ஹிமேஷ் ரேஷ்மையா

ஓம் நமோ நாராயணாய...

கல்லை மட்டும் கண்டால்
கடவுள் தெரியாது
கடவுள் மட்டும் கண்டால்
கல்லடி தெரியாது
எட்டில் ஐந்து எண் கழியும் என்றால்
ஐந்தில் எட்டு ஏன் கழியாது
அட்ச அட்சரம் பார்க்கும் நெஞ்சு
பஞ்ச அட்சரம் பார்க்காது
ஊனக் கண்ணில் பார்த்தால்
யாவும் குற்றம் தான்
ஞானக் கண்ணில் பார்த்தால்
யாவும் சுத்தம் தான்
(கல்லை மட்டும் கண்டால்)

இல்லை என்று சொன்ன போதும்
இன்றியமையாது
தொல்லை தந்த போதும் எங்கள்
தில்லை மாறாது
(இல்லை என்று சொன்னபோதும்.)
வீர சைவர்கள் முன்னால் எங்கள்
ஈர வைணவம் தோற்காது
மன்னன் சொல்லுக்கு அஞ்சி என்றும்
மேற்கில் சூரியன் உதிக்காது
ராஜலெட்சுமி நாயகன்
சீனிவாசன் தான்
சீனிவாசன் சேய் இந்த
விஷ்ணுதாசன் தான்
நாட்டில் உண்டு ஆயிரம்
ராஜ ராஜன் தான்
ராஜனுக்கு ராஜன் இந்த
ரங்கராஜன் தான்
(கல்லை மட்டும் கண்டால்..)

நீருக்குள்ளே மூழ்கினாலும் நீதி சாகாது
நெஞ்சுக்குள்ளே வாழும் எங்கள்
ஜோதி சாகாது
(நீருக்குள்ளே மூழ்கினாலும்..)
வீசும் காற்று வந்து விளக்கணைக்கும்
வெண்ணிலாவை அது
அணைத்திடுமா
கொட்டும் வான்மழை
நிலம் நனைக்கும்
அந்த வானம்தன்னை அது
நனைத்திடுமா
சைவம் என்று பார்த்தால்
தெய்வம் தெரியாது
தெய்வம் என்று பார்த்தால்
சமயம் தெரியாது
(கல்லை மட்டும் கண்டால் )(2)

## சிறுவர் பகுதி



# பழைய சோறு!

ஒரு ஊரில் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவரிடம் ஏராளமான பணம் இருந்தும், அவர் தான தர்மங்களை செய்யாமல் இருந்தார்.

ஒருசமயம் அவர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவருடைய மருமகள் அவருக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள்.

அப்போது ஒரு பிச்சைக்காரன் வாசலில் வந்து நின்று, ''தாயே பிச்சை இடு!'' என்று கூவினான்.

அப்போது மருமகள், ''என் மாமனாரே பழையதுதான் சாப்பிடுகிறார். ஆகவே, நீங்கள் வேறு வீடு சென்று கேளுங்கள்,'' என்றாள்.

இதைக் கேட்ட செல்வந்தருக்கு கோபம் வந்துவிட்டது.

''நான் புதிதாக செய்த சுடுசோறு சாப்பிடும் போதும் பழையதுதான் சாப்பிடுகிறேன் என்று பொய் சொல்லி என்னை அவமானப் படுத்துகிறாய்... ஆகவே, இப்போதே இந்த நிமிடம் வீட்டை விட்டு வெளியேறு,'' என்று சீறினார். ''மாமா கோபப்படாமல் நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள். சொல்லவேண்டியதை சொல்லிவிட்டு நான் வீட்டைவிட்டுச் செல்கிறேன். மனிதர்களுக்கு பூர்வ ஜென்ம புண்ணியத்தினால் தான் பொருள் செல்வம் கிடைக்கிறது. இப்போது உங்களிடம் உள்ளபொருள் எல்லாம் பூர்வ ஜன்ம புண்ணியத்தினால் கிடைத்தவை. இந்த பிறவியில் நீங்கள் ஒரு புண்ணியமும் செய்யவில்லை. அதனால்தான் நீங்கள் சாப்பிடுவதை பழையது என்று சொன்னேன். இப்போது சொல்லுங்கள் நான் சொன்னது தவறா?'' என்றாள்.

''மகளே! நீ சொன்னது நூற்றுக்கு நூறு சரியே... என்னிடம் ஏராளமான பணம் இருந்தும், தான தர்மம் செய்யாமல் இருந்தேன். இனிமேல் அதை செய்து, மறுபிறவிக்கு செல்வம் சேர்ப்பேன்,'' என்றார்.

## அதிசய ஆலங்கட்டி மழைகள்

ஆலங்கட்டி மழையே நமக்கு அதிசயமாகத் தோன்றும். இது சில அதிசய ஆலங்கட்டி மழைகளைப் பற்றியது.

* 1949ஆம் ஆண்டு ஆகஸ்டில் அவுஸ்திரேலியாவில் நட்சத்திர வடிவில் ஆலங்கட்டிகள் மழை பொழிந்தது.
* இதுபோல கோலராடோ பல்கலைக்கழக வளாகத்தில் பிரமிட் வடிவில் ஆலங்கட்டிகள் விழுந்துள்ளன.
* 1961ஆம் ஆண்டு பசிபிக் கடலில் சென்ற கப்பல் ஒன்று ஆலங்கட்டி மழையால் சேதம் அடைந்தது. கப்பலில் ஏராளமான துளைகள் விழுந்தன.
* 1834 இல் தென் அமெரிக்காவின் படுவா நகரில் பெய்த மழையில் ஆலங்கட்டிக்குள் இரும்புக் குண்டுகள் இருந்துள்ளன.
* 1882ஆம் ஆண்டு படுவா நகரில் பெய்த மழையில் விண்கற்கள் ஆலங்கட்டிக்குள் பொதிந்த நிலையில் வீழ்ந்தன.
* 1894ஆம் ஆண்டு விக்ஸ்பர்க் நகரில் நண்டு பொதிந்த ஆலங்கட்டி விழுந்துள்ளது. அதே புயலில் மற்றொரு இடத்தில் 8 அங்குல நீளமுள்ள ஆமையும் பனிக்கட்டிக்குள் புதைந்த நிலையில் விழுந்தது.

## முட்டை செய்திகள்

* பெண் கொசு ஒரு தடவைக்கு 300 முட்டை வரை இடும்.
* லோப்ஸ்டர்கள் ஒரே சமயம் இலட்சம் முட்டை இடும்.
* முட்டையிட்டு பால் தரும் விலங்கு பிளாடிபஸ்.
* பென்குயின்களில் ஆண் பெங்குயின் தன் காலடியில் வைத்து முட்டைகளை அடை காக்கும்.

## என்னைப்பற்றி தெரியுமா?

கங்காரு அவுஸ்திரேலியாவில் அதிகமாகக் காணப்படும் ஓர் அதிசய விலங்கு ஆகும். இவை சராசரியாக ஆறு அடி உயரம் கொண்டவை. பிறக்கும் போது கங்காருவின் உயரம் என்ன தெரியுமா? ஒரே ஓர் அங்குலம்தான்! ஒரு தாவலில் இருபது அடி கூட தாண்டக்கூடிய ஆற்றல் உள்ளது. இவ்வாறு நீண்டதூரம் தாண்டுவதற்கு வசதியாக மிகவும் உறுதியான பின்னங்கால்களையும், குட்டையான முன்னங்கால்களையும் கொண்டது. இதன் வாலும் மிகவும் உறுதியானது. எதிரியை வாலால் தாக்கி எதிர்க்கும் குணம் உள்ளது. இவ்வளவு உறுதி கொண்ட கங்காரு ஒரு சைவப்பிராணி என்பது குறிப்பிடத் தக்கது.



## தோசைக் கல் கரி நல்லது!

தோசைக் கல் கரி நல்லது!

தோசைக் கல்லில் உருவாகும் கரி உடலுக்கு நல்லது.

அது எப்படி என்று அறிவோமா?

இரும்பால் ஆன தோசைக் கல்லை சூடுபடுத்தும் போது,

அதன் மேற்பரப்பில் இரும்பு ஒட்சைட் உண்டாகும். இது கறுப்பு நிறத்தில் மெல்லிய படலமாக படர்ந்திருக்கும்.

இதை கழுவி எளிதில் நீக்கிவிட முடியாது. இந்த இரும்பு ஒட்சைட் கரிப்படலம் உடலுக்கு நன்மை செய்யக்கூடியது.

உடலுக்கு அவசியமான இரும்புச் சத்து கிடைக்க

உதவும். ஆனால் மாவை ஊற்றிய பிறகு சூட்டினால் மாவு கரிந்து உருவாகும் கரிதான் உடலுக்கு கேடானது.

ஒட்டாத தன்மை கொண்ட பாத்திரங்களை விட இரும்பு மற்றும் மண்சட்டி பாத்திரங்கள் உடலுக்கு அவசியமான இரும்புச் சத்து கிடைக்க உதவுகிறது என்பது சில ஆய்வுகளிலும் தெளிவாகி இருக்கிறது.

## பட்டின் தாயகம் சீனா!



சீன தேசத்தின் சக்கரவர்த்தி ஹூவாங்டை என்பவரின் மனைவி மகாராணி ஒருமுறை கையில் தேநீர்க் கோப்பையுடன் அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார்.

சற்றே ஓய்வு எடுக்க அங்கிருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்தார். கையில் சூடான தேநீர்க் கோப்பை. அப்பொழுது அந்தக் கோப்பையில் மேலிருந்து ஏதோ ஒரு பொருள் விழுந்தது.

அது என்னவென்று அவர் உற்றுப் பார்க்க, நிலக்கடலை அளவில் ஒரு பொருளின் பகுதிகள் கரைந்து நூல் நூலாகக் கோப்பைக்குள்ள சுழன்று கொண்டிருப்பதைக் கவனித்தார். மேலே பார்த்தார். அங்கிருந்த மல்பெரி மரத்திலிருந்துதான் அந்தப் பொருள் விழுந்தது என்பதைப் புரிந்துகொண்டார். அரசரிடம் இதுபற்றிக் கூறினார்.

பிறகென்ன? அரண்மனை அறிஞர்கள் எல்லோரும் சேர்ந்து மல்பெரி மரத்தை ஆராய்ச்சி செய்தார்கள். மரத்தில் பட்டுப்புழுக்கள் கூடு கட்டி இருப்பது தெரிய வந்தது. நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு இந்தப் பட்டுப்புழு கூடு சூடான நீர் பட்டதும் நூல் வடிவம் எடுக்கிறது என்பதைக் கண்டறிந்தார்கள்.


அதன் பிறகு மளமளவென்று வேலைகள் நடந்தன. சீனக் கைவினைஞர்கள் இந்தப் பட்டுப்புழுவிலிருந்து நூல் எடுக்கும் வித்தையைக் கற்றுக் கொண்டார்கள். பட்டின் அத்தியாயம் தொடங்கிற்று.

Colour: Cyan Magenta Black

(18) இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களை ஆண்ட, சிறந்த தமிழ் மன்னனும் துட்டகைமுனுவால் சிலை வைக்கப்பட்டவனும் பின்வருபவர்களில் யார்?

i. எல்லாளன் ii. சங்கிலியன்
iii. பண்டார வன்னியன் iv. வீரபாண்டிய கட்டப்பொம்மன்

(19) பின்வருமாறு நீர் நிரம்பிய போத்தலின் வாயை தேநீர் வடியில் கவிழ்த்துப் பிடிக்கும் போது நடைபெறும் விளைவு



i. நீர் நன்றாக வடியும்
ii. சிறு துளியாக வெளியேறும்
iii. நீர் வடியினூடாக விழாது
iv. முழு நீரும் வெளியேறும்

(20) மஞ்சள் நிறப் பிண்ணனியுடன் காணப்படும் இவ் வீதிச் சமிக்ஞையினால் வெளிப்படுத்தப்படுவது



i. பிள்ளைகள் பாதையைக் கடக்குமிடம் முன்னால்
ii. பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம் முன்னால்
iii. விரைவாகப் பாதையைக் கடக்கவும்
iv. பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம்


(21) எல்லாப் பறவைகளுக்கும் பொதுவான இயல்பு எது ?
i. பறப்பதற்கு இயலுமாக இருத்தல்
ii. பழங்களை மட்டும் உண்ணுதல்
iii. உடலில் இறகு இருத்தல்
iv. உயரப் பறத்தல்

(22) எல்லா ஆசிரியர்களுக்கும் பொதுவான இயல்பு
i. நீண்ட நேரம் பாட வேலைகளைச் செய்தல்
ii. ரியூசனில் கற்பித்தல்
iii. ஏதோ ஒரு பாடத்தை போதிப்பவராக இருத்தல்
iv. கணிதத்தை மட்டும் முக்கியப்படுத்தி கற்பித்தல்

(23) கிரிக்கட் விளையாட்டில் ஓர் அணியில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை யாது?
i. 16
ii. 15
iii. 11
iv. 9

(24) தேசப்படத்தில் கடலைக் குறிக்கப் பயன்படும் நிறம் யாது?
i. கபிலம் ii. மஞ்சள்
iii. நீலம் iv. சிவப்பு

(25)




அருகே காட்டப்பட்டுள்ள நட்சத்திரக் கோலம்
i. கலப்பை
ii. தேள்
iii. வேட்டைக்காரன்
iv. பெருநாய்

(26) வயலில் சூடு அடிக்கும் களத்தில் ‘குல்லம்’என அழைக்கப்படுவது
i. அரிவாள் ii. சுளகு
iii. பாய் iv. வைக்கோல்

(27) இலங்கைக்கே உரித்தான பறவை
i. கொக்கு ii. கிளி
iii. காட்டுக்கோழி iv. மயில்

(28) இவ்வுருவில் காட்டப்படும் தையல் முறைமை



i. சங்கிலித்தையல் ii. கம்பளித் தையல்
iii. மீன் முள்ளுத்தையல் iv. வெட்டுத்துண்டுத்தையல்

**பின்வரும் விலங்கினங்களின் பெயர்களையும் அவை எவ்வகை உண்ணி என்பதனையும் புள்ளிக் கோட்டில் எழுதுக .**

(29)



__________

(30)




__________

(31)



__________

32)



__________

(33) ஒரு பிள்ளைக்கு தினமும் காலையும் மாலையும் உணவாக, நான்கு சிறிய விசுக்கோத்துகள் வீதம், 8 நாட்களுக்குத் தேவையான விசுக் கோத்துகள் எவ்வளவு ?

__________

(34) 1kg பருப்பின் விலை ரூபா 40.00 ஆகும் 1kg 750g பருப்பினை வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?


__________

(35) 108 பயிற்சிப் புத்தகங்களை 9 வகுப்பறைக்கு பகிர்ந்து கொடுத்தால்,ஒருவகுப்பறைக்கு கிடைக்கும் பயிற்சிப் புத்தகங்கள் எத்தனை ?

__________

[36] கமலாவிடம் கண்ணனை விட 3 மடங்கு பணம் கூடுதலாக இருந்தது. கண்ணனின் தந்தை, கண்ணனுக்கு ரூபா 40 ஐ கொடுத்தார். இப்போது இருவரின் பணமும் சமனாகக் காணப் படுகிறது. இருவரிடமும் இருக்கின்ற பணத்தொகையின் கூட்டுத்தொகை எவ்வளவு ?

[37] பின்வரும் மூன்று அடைப்புக்களில் சிறிய புள்ளிகள் ஒரு கோலத்திற்கேற்ப இடப்பட்டுள்ளன. இதற்கேற்ப அடுத்த அடைப்பில் புள்ளிகளை வரைக .



[38] கூட்டுக : 1/2 + 3/4

[39]



இக் கட்டங்களில் 2/3 பங்கிற்கு நிறம் தீட்டுக?

[40] **அன்றைய இரவுப் பொழுது குமரனுக்கு மறக்க முடியாதிருந்தது. அழகிய பால் போன்ற நிலவில் அவன் பார்த்து ரசித்த இன்னோரன்ன காட்சிகள் இன்றும் மனதை விட்டு நீங்காது இருக்கின்றன. தனது நண்பனைப் பாடசாலையில் கண்டு, தான் நிலவொளியில் கண்ட அற்புதங்களைப் பறை சாற்றத் தொடங்கினான். நீர் தான் குமரன் எனக் கொண்டு,** அக்காட்சியினை ஐந்து சொற்களுக்குக் குறையாமல் ஆறு வாக்கியங்களில் சரியான எழுவாய் பயனிலைகளுடன் எழுதுக.

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. ______________________________

6. ______________________________

## கல்விக்குரல் 16 இற்கான விடைகள் பகுதி – 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) 03 | 02) 01 | 03) 03 | 04) 02 | 05) 01 | 06) 03 |
| 07) 02 | 08) 01 | 09) 01 | 10) 03 | 11) 02 | 12) 02 |
| 13) 03 | 14) 02 | 15) 01 | 16) 02 | 17) 02 | 18) 03 |
| 19) 02 | 20) 03 | 21) 01 | 22) 03 | 23) 03 | 24) 01 |
| 25) 02 | 26) 02 | 27) 02 | 28) 01 | 29) 01 | 30) 01 |
| 31) 01 | 32) 02 | 33) 01 | 34) 02 | 35) 02,12 | 36) 04,15 |
| 37) 03 | 38) 02 | 39) 02 | 40) 03 | | |

## பகுதி – 2

01) 1. பொங்கல்
2. செங்கதிரோன் ஒளிபரப்ப
3. உழவர்
4. கதிரோன். பகலவன்
செங்கதிரோன் தூயசுடர்
கதிரோன்
5. அ. புள்ளினங்கள்
ஆ. உவகை
6. விரைந்து + ஒலிக்கும்
7. மழை பொழிந்து வயல் விளைந்து வறுமையின்றி மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும்

02) 1. அங்கும் இங்கும்
2. வெள்ளை
3. ஒடியது

03) 1. வெள்ளோட்டம்
2. வள்ளல்
3. மாலுமி


04) 1. சுற்றும் முற்றும் பார்த்தபின் பற்றை மறைவில் படுத்து உறங்கினேன்.
2. மாணவர்கள் பால் குடித்தனர்

05) 1. Pine apple
2. Television
3. நாங்கள் ஒரு கோப்பை தேநீர் அருந்துவோமா?
4. we are go to last week kandy

06) 1. அம்மா கெதெரெட்ட எனவா
2. தேங்காய் என்ன விலை?

07) ! " " .

08) 8. 1
9. 3
10. 1
11. 4
12. 1
13. 2
14. 2
15. 2
16. 3
17. 1
18. 2
19. 3
20. 4
21. 2
22. 1
23. 4
24. 2
25. 4
26. 2
27. 3
28. 3
29. 4
30. 3
31. 2
32.



33. 2
34. 7
35. 8
36. 1
37. 3
38. 0.6
39. 2Kg 450g
40. 20,8,69000
41. $\frac{3}{9}$
42. பூச்சியம்
43. 2542
44. 95ml
45. 1400
46. 7
47. 71 kg
48. 1. 12
2. 24
49. 180 ரூபா

[20] நிலப்பரப்பினடிப்படையில் கூடியதிலிருந்து குறைந்து செல்லும் தொகுதி.

i. கிராமம், மாவட்டம், நாடு, மாகாணம்

ii. நாடு, மாகாணம், கிராமம், மாவட்டம்

iii. நாடு, மாகாணம்,மாவட்டம்,கிராமம்

[21] யாழ்ப்பாணத்திலிருந்து பி.ப 12.25 மணிக்கு புறப்பட்ட பஸ் வண்டி 4மணித்தியாலங்கள் 15 நிமிடத்தின் பின்னர் வவுனியாவைச் சென்றடைந்தது. அது வவுனியாவைச் சென்றடைந்த நேரம் யாது?


i. பி.ப 4.40

ii. பி.ப 6.15

iii. பி.ப 5.35

★ **பின்வரும் கோலங்களை விளங்கி 22ஆம் 23ஆம் வினாக்களுக்கு இடைவெளியில் வரவேண்டிய விடையை தெரிவு செய்க.**

[22]




i.12

ii.20

iii.18

[23]



i. 6

ii. 12

iii. 9


[24] எனது வயது 9 வருடங்கள் ஆகும். எனது தங்கை என்னை விட 6 வருடங்கள் இளையவள். இன்னும் எத்தனை வருடங்களில் தம்பியின் வயது எனது வயதின் அரைவாசியாக இருக்கும் .

i.4 வருடங்கள்

ii.3வருடங்கள்

iii. 6வருடங்கள்

★ **பொருட்களின் விலையின் கூட்டுத் தொகையை அவதானியுங்கள்**




[25] மாம்பழம் ஒன்றும் வாழைப்பழம் ஒன்றும் என்ன விலை ?

i. ரூபா 18.00

ii. ரூபா.17.00

iii. ரூபா.16.00

[26] மூன்று மாம்பழங்களையும் மூன்று வாழைப்பழங்களையும் வாங்கி ரூபா 100.00 ஐ கடைக்காரரிடம் கொடுத்தால் மீதிப் பணம் எவ்வளவு கிடைக்கும் ?

i. ரூபா 86.00

ii. ரூபா.44.00

iii. ரூபா.46.00

[27] கடலில் எப்போதும் இருக்கக்கூடியது.

i. அலை, கப்பல்

ii. நீர், உப்புச்சுவை

iii. மீன், தாவரங்கள்

[28] ஒரு புத்தகத்தில் எப்போதும் இருப்பது


i. படங்கள்


ii. கதைகள்

iii. பக்கங்கள்

★ **பின்வருமாறு ஒரு சதுரக் கடதாசியை நான்காக மடித்து துளையிடப்பட்டது. பின்பு விரித்துப் பார்த்த போது கிடைக்கக் கூடிய வடிவம் எது?**

[29]





i. ii. iii.

[30] பின்வருமாறு ஓர் ஒழுங்கு முறைப்படி இலக்கங்கள் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இதன்படி இறுதிக் கூட்டினுள் வரவேண்டிய இலக்கங்கள் எவை?

9432 → 2943 → 3294 → [ ]

i. 9234
ii. 3924
iii. 4329

[31]

| | | | |
|---|---|---|---|
| A | B | C | D |
| E | F | G | H |
| I | J | K | L |

இவ்வுருவமானது A யிலிருந்து L வரையான அறைகளைக் கொண்ட ஒரு விடுதியாகும். A யிலிருந்து D வரை ஒவ்வொன்றிலும் 3பேர் வீதமும், E யிலிருந்து H வரை 2பேர் வீதமும் I இலிருந்து L வரை 4பேர் வீதமும் அமர்த்தப்பட்டிருந்தனர் எனின், DHL இல் அமர்த்தப்பட்ட நபர்கள் எத்தனை?

i. 9பேர்
ii. 12பேர்
iii. 16பேர்


[32] இரண்டு கம்பங்களுக்கிடையே பச்சை, மஞ்சள், நீலம், வெள்ளை என்ற வரிசையில் கொடிகள் வரிசையாக நாட்டப்பட்டிருந்தன. இதன்படி 25 கம்பங்களுக்கிடையே எத்தனை கொடிகள் நாட்டப்படும்.

i. 125
ii. 115
iii. 96

[33] ஒருவர் தனது உழைப்பின் 3/4 பகுதியை வீட்டு வாடகைக்கும் 1/8 பகுதியை உடை வாங்கவும் மிகுதிப் பங்கான ரூபா. 180.00 ஐ வங்கியிலும் சேமித்தார் எனின், அவரின் சம்பளம் எவ்வளவு?

i. ரூபா 1440.00
ii. ரூபா. 820.00
iii. ரூபா. 1280.00


[34]




இவ் வரைபடத்தின் பிரகாரம் கூடிய உணவுப் பண்டத்தை விரும்புவர்கள் எதனை விரும்புகிறார்கள்?


i. பிட்டு
ii. இடியப்பம்
iii. உணவு

[35] இத்திண்ம உருவில் A பகுதி வெட்டி நீக்கப்பட்டால் அதன் மேற்பகுதி என்ன பெயரால் அழைக்கப்படும்?




i. கூம்பு
ii. கூம்பகம்
iii. முக்கோணம்

[36]



இக்குறியீடு உணர்த்தும் அபாய எச்சரிக்கை

i. மண்டை ஓடும் எலும்பும்
ii. அபாயகரமானது
iii. பயங்கரமான பிரதேசம்

[37]

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வகுப்பு A | ○ | ○ | ○ | ○ | ○ | |
| வகுப்பு B | ○ | ○ | ○ | ○ | | |

பின்வரும் வரைபு A,B எனும் இரண்டு வகுப்பறைகளில் அடுக்கப்பட்டுள்ள கதிரைகளின் எண்ணிக்கையைக் குறித்து நிற்கிறது. ஒவ்வொரு வட்ட வடிவமும் 5 கதிரைகளைக் குறித்து நிற்கும் .

வகுப்பு A யில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை

i. 5
ii. 25
iii. 125

[38] மின்வெட்டு நேரம் குறைந்தால் சமையல் எரிபொருளின் அளவு குறையும். மின்வெட்டு நேரம் அதிகரித்தது. இதனால்

i. எரிபொருள் பாவனை குறைந்தது
ii. எரிபொருள் பாவனை அதிகரித்தது
iii. எரிபொருள் பாவனையில் மாற்றமில்லை

[39] ஒரு லீப் வருடத்தின் ஜனவரி மாதம் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இதன்படி அடுத்த வருடம் 1ஆம் திகதி ஜனவரி மாதம் என்ன கிழமை ஆகும்?

i. வெள்ளி
ii. சனி
iii. ஞாயிறு

[40] பிள்ளை ஒன்று அதிகாலை வேளை, கோவிலுக்குச் சென்ற போது, அந்தப் பிள்ளையின் நிழலானது, அதன் வலது கைத் திசையில் விழுந்தது எனின், அப்பிள்ளை எத்திசை நோக்கிச் செல்கின்றது.

i. வடக்கு ii. தெற்கு iii. மேற்கு

# என்ன ஆறுதல் சொல்ல முடியும்?

நாட்டில் விபத்துக்கள் சர்வ சாதாரணமாக நடக்கின்றன. கடந்த நிமிடம் வரை உயிரோடு உலவித் திரிந்தவர்கள் விபத்தில் சிக்கி வெறும் சதைக் குவியல்களாக வீதியில் கிடப்பதைப் பார்த்து துடிக்கின்ற மனம் இன்னும் சில நாட்கள் கழிந்து அதே வீதியில் செல்லும் போது யதார்த்தமாய் கடந்துபோகிறது.

நமக்கு நேரும்வரை அது ஒரு செய்தி அல்லது சம்பவம் மட்டுமே! ஆனால் விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள், தன் உறவுகளைப் பறிகொடுத்தவர்களின் நிலை எத்தனை பரிதாபகரமானது? அவர்களது வாழ்க்கையில் அந்த விபத்து எத்தனை பெரிய சோகத்தை விதைக்கிறது!?



அன்று பொசன் போயா தினம். விடுமுறை நாள் என்பதால் தன் தாய், தந்தையை பார்க்கச் செல்ல சுசந்த தயாராகிக் கொண்டிருந்தார். காலை 11.30 மணியளவில் தனது வீட்டுக்கு பக்கத்திலிருக்கும் சுசந்தவின் சித்தப்பாவின் மகள் மஹேஷிகா, சுசந்தவை உரக்க அழைத்தாள். ''சுசந்த அண்ணா... சுசந்த அண்ணா... பன்சலைக்கு சென்ற உங்கள் மனைவியும் குழந்தைகளும் எக்சிடன்ட் ஆகிவிட்டார்களாம்... வாருங்கள் வேகமாக செல்வோம்.'' எனக் கதறினாள்.

தன் இதயம் நின்றுவிடும் போலிருந்தது சுசந்தவிற்கு. தன் மனைவிக்கும், பச்சிளம் குழந்தைகளுக்கும் எதுவும் நடந்துவிடக் கூடாது என உலகத்தில் உள்ள அனைத்து தெய்வங்களையும் வேண்டிக் கொண்டு விரைந்தார் சுசந்த.

சுசந்த கித்சிரி (40 வயது) சிறிமா சுவர்ணலதா (38 வயது) தம்பதிகள் ரம்புக்கன்ன ஹேவாதிவல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களது மகன் சசங்க ஜயரத்ன (11 வயது) திரிகம கனிஷ்ட வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்கிறான். மகள் மல்ஷா நேத்மி (1 வயது). 23 ஆம் திகதி பொசன் போயா தினம்! காலையிலேயே விகாரைக்கு போக வேண்டும் என சசங்க நச்சரிக்க ஆரம்பித்து விட்டான். வெளியில் செல்வதென்றால் மல்ஷாவிற்கும் கொள்ளை பிரியம். தளுகல்லயில் உள்ள விகாரைக்கு சென்று வழிபட்டுவிட்டு பின்னவளையில் இருக்கும் கணவனின் தாய் வீட்டுக்குச் செல்ல சுவர்ணலதா திட்டமிட்டிருந்தாள். வீட்டில் அவசிய வேலைகள் சில இருந்ததால் சுசந்த சற்று நேரம் கழித்து அங்கு வந்து சேர்ந்து கொள்வதாகக் கூறினான். தன் குடும்பத்திற்கு மிகப் பெரிய கண்டம் வர இருப்பதை சுசந்த அறிந்திருந்தால் அவர்களை தனியாக அனுப்பியிருக்க மாட்டான். விதி வலியது என்பதை சும்மாவா கூறினார்கள்.

கணவனிடம் கூறியபடி தளுகல்ல விகாரைக்குச் சென்று கடவுளை தரிசித்துவிட்டு பின்னவளையில் இருக்கும் தன் மாமி வீட்டுக்குச் செல்ல தயாரானாள் சுவர்ணலதா. பஸ் தரிப்பிடத்தை நோக்கிச் செல்ல பாதையை கடக்க நின்று கொண்டிருந்த போதே கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த கோரச் சம்பவம் நடந்தேறியது. ரம்புக்கனையில் இருந்து கேகாலை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் வண்டி (61-3158) பாதையை கடக்க நின்றுகொண்டிருந்த சுவர்ணலதாவையும் அவருடன் இருந்த இரு குழந்தைகளையும் வேகமாக மோதியதில் மூவரும் தூக்கியெறியப்பட்டனர். கடும் காயங்களுக்குள்ளாகியிருந்த மூவரையும் ரம்புக்கன வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதன் பின்னரே சுசந்தவிற்கு தகவல் கொடுக்கப்பட்டது.



தன் குழந்தைகளுக்கும், மனைவிக்கும் எதுவும் நடந்துவிடக்கூடாது என கடவுளை வேண்டிக்கொண்டு வந்த சுசந்தவின் வேண்டுகோள் கடவுளின் காதுகளில் விழவில்லைப் போலும்.

கடவுளை தரிசித்து விட்டு பாட்டியை பார்க்கப் போகின்றோம் என துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த அன்பு மகன் சசங்க முகம் சிதைந்து போய் உயிரற்று துவண்டு கிடந்தான். தன் மகனின் நிலையைக் கண்ட சுசந்தவின் இரத்தம் உறைந்து போனது. கண்ணீருடன் கதறியழுத சுசந்த தன்னைச் சுற்றிச் சுற்றி வரும் பாசமிகு மகள் மல்ஷாவின் நிலையை அறியத் துடித்தார். பட்டகாலிலேயே படும் என்பது போல ஒட்டுமொத்த புத்திர சோகத்தையும் சுசந்தவிற்கு கொடுக்க கடவுள் முனைந்துவிட்டார். அப்பா... எனத் தாவிக் கொண்டு வரும் அப் பச்சிளம் குழந்தையின் உயிரையும் எமன் பறித்துக் கொண்டான்.

தன் இரு குழந்தைகளும் பலியான சோகத்தை தாங்க முடியாத சுசந்தவிற்கு தன் மனைவி சுவர்ணலதா அவசர சிகிச்சைப் பிரிவில் நலமுடன் இருக்கின்றார் என்பதே சிறு ஆறுதலான செய்தி. தன் குழந்தைகளை பறிகொடுத்துவிட்டு எதுவும் அறியாமல் படுத்திருக்கும் அந்தத் தாய்க்கு சுசந்த எவ்வாறு ஆறுதல் சொல்லப் போகின்றார்? சுவர்ணலதா எவ்வாறு இந்த சோகத்தை தாங்கிக் கொள்ளப் போகின்றார்.

பஸ் சாரதியை கைது செய்து விசாரணை நடத்திய ரம்புக்கனை பொலிஸார் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சென்றமையாலேயே விபத்து நடந்ததை ஊர்ஜிதம் செய்துள்ளனர். சாரதிகளின் கவனயீனங்களால் விபத்துகள் சர்வ சாதாரணமாக நிகழ்கின்றன என்பதற்கு மேற்கூறிய சம்பவம் சிறந்த உதாரணம்.

தன் அன்பு குழந்தைகளை இழந்து விட்டு அநாதரவாய் நிற்கும் சுசந்த, சுவர்ணலதா தம்பதிகளுக்கு என்ன ஆறுதல் கூறுவது?

எம்.தாசன்

# மாணவனை மிருகத்தனமாக தாக்கிய அதிபர்

மாகாணசபை உறுப்பினர் ஒருவர் ஆசிரியை ஒருவரை முழந்தாளிட வைத்தது. மாணவரொருவர் அதிபரைத் தாக்கியமை அத்தோடு ஹொரணைப் பிரதேச பாடசாலை அதிபரொருவரால் பதினொராம் தரத்தில் கற்கும் 15 வயது மாணவன் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை. அந்தச் சூடு தணிவதற்குள் திறந்த பல்கலைக்கழக சட்ட பீட தலைவரை சட்டபீட மாணவரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியமை என கல்வித்துறை இன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

இவற்றின் பரபரப்புகள் தணிவதற்குள் மற்றுமொரு அதிர்ச்சிக்குரிய சம்பவம் கடந்த 26 ஆம் திகதி தொடங்கொடப் பகுதியில் பதிவாகியுள்ளது.

பொசன் வெளிச்சக் கூடு போட்டியொன்றின் பரிசிலை அமைச்சரிடம் இருந்து தனக்குப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்காமல் போனதால் ஆத்திரமடைந்த அப்பாடசாலையின் அதிபரான பெண் பரிசிலைப் பெற்றுக் கொண்ட மாணவனை மிருகத்தனமாக அடித்து வைத்தியசாலைக்கு அனுப்பிய செய்திதான் அது.



கடந்த பொசன் போயா தினத்தை முன்னிட்டு வெசாக் வெளிச்சக்கூடு போட்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கலைப் படைப்புகளில் ஆர்வம் காட்டிய தொடங்கொட நவோதயா மகா வித்தியாலய 11 ஆம் தர மாணவனான இஷார ஜயலத் இப் போட்டியில் தானும் கலந்து கொண்டு முதல் பரிசை வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தொடங்கொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை நாடினான். விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொண்ட இஷார ஜயலத் அதைப் பூர்த்தி செய்து அதிபரின் உறுதிப்படுத்தலோடு அதனை மீண்டும் பொலிஸ் நிலையத்தில் கையளித்தான்.

பொசன் போயா தினமன்று இஷாரவின் வெளிச்சக்கூடுகளும் ஏனையவற்றுடன் சளைக்காமல் கம்பீரமாக நின்றது. பலரும் பார்த்து ரசித்த அந்த வெளிச்சக்கூடு நடுவர்களையும் கவர்ந்து விட்டது. இஷாரவின் முயற்சி வீண்போகவில்லை. அவன் எதிர்பார்த்தது போலவே போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசைத் தட்டிக் கொண்டான்.

போட்டிக்கான பரிசில் வழங்கும் வைபவம் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் தலைமையில் இடம் பெற்றது. அப்போது முதல் பரிசைப் பெற்றுக் கொண்ட பாடசாலையின் பெயர் சொல்லப்பட்ட போது இஷார மகிழ்ச்சியாக சென்று தனக்குக் கிடைத்த முதல் பரிசு 15000 ரூபாவை அமைச்சர் குமார வெல்கமவிடம் இருந்து பெற்றுக் கொண்டான்.

ஆனால் அந்த மகிழ்ச்சி மேடையை விட்டு இறங்கிய ஓரிரு கணப் பொழுதுகளில் தவிடுபொடியாகி விட்டது. தனது கற்பனைத் திறனுக்கும் கலை முயற்சிக்கும் கிடைத்த பணத்தை அதிபர் பறித்துக்கொண்டு "நான் மேடை ஏறி பெற்றுக் கொள்ள இருந்த பணத்தை நீ ஏன் சென்று பெற்றுக் கொண்டாய்" என்று கேட்டு இஷாரவை கடுமையாகத் திட்டியுள்ளார்.

தான் கஷ்டப்பட்டு வெற்றி பெற்ற பணம் பாடசாலைக்குத் தானே என்று மனதைத் தேற்றிக் கொண்ட இஷார மறு நாள் 26 ஆம் திகதி வழமை போல பாடசாலைக்குச் சென்றான்.



காலைக் கூட்டம் நடைபெறும் போது ஒரு ஆசிரியர், கூட்டம் முடிந்ததும் அதிபரைப் போய் சந்தி" என்று சொல்லியிருக்கிறார். கூட்டம் முடிய சற்று மனப் பதறலோடு அதிபரைச் சந்தித்த இஷாரவுக்கு முதல் நாள் கிடைத்ததை விடப் பெரிய பரிசு கிடைத்தது. தாறுமாறான பிரம்படி.

தான் மேடை ஏறி பெற்றுக் கொள்ள இருந்த பரிசை இஷார பெற்றுக் கொண்டதை பொறுக்க முடியாத அந்த பெண் அதிபர் இஷாரவைப் பிரம்பினால் கண்டபடி அடித்துள்ளார்.

26 ஆம் திகதி இஷாரவின் பெற்றோர் வேலை முடிந்து வீட்டுக்கு வரும் போது இஷார வீட்டில் இருக்கவில்லை.

"வெளிச்சக்கூடு போட்டியில் பரிசு பெற்றுக் கொண்டத ற்காக கூட்டம் முடிந்து எல்லோர் முன்னிலையிலும் அதிபர் எனக்கு கண்டபடி அடித்தார். எனக்கு இனி பாடசாலை செல்ல முடியாது. எனக்கு அவமானமாக உள்ளது. நான் வீட்டை விட்டுச் செல்கிறேன்" என்று கூறி கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு வீட்டை விட்டுச் சென்றிருந்தான்.

இஷாரவின் பெற்றோர் ஊர் முழுவதும் தேடியும் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பின்னர் ஒரு காட்டுக்குள் இருந்து இஷாரவைக் கண்டு பிடித்த பெற்றோர் அவனது உடம்பில் 20 இற்கும் மேற்பட்ட பிரம்படித் தழும்புகள் இருந்ததைக் கண்டு பதறிப் போனார்கள்.

சம்பவம் தொடர்பாக தொடங்கொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்கள். பொலிஸார் உடனடியாக இஷாரவை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு கடிதமொன்றைக் கொடுத்து அனுப்பினார்கள்.

இஷார கஷ்டப்பட்டு போட்டியிட்டு வெற்றி பெற்ற பரிசு. அதை அவனே மேடை எறிப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதிபர் அதனை தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்.

மாகாணசபை உறுப்பினர் ஒருவர் ஆசிரியை ஒருவரை முழந்தாளிட வைத்ததைக் கண்டித்து வீதியில் இறங்கி பதாகைகள் ஏந்தி கோஷம் போட்டவர்கள் இஷாரவின் விடயத்தில் ஒன்றுமே செய்யாமல் வாய்மூடி இருப்பதற்கு என்ன காரணம்?

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலிஸ் ஊடகப் பிரிவைத் தொடர்பு கொண்டு கேட்ட போது இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இன்னும் யாரும் கைது செய்யப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் இலங்கை தேசிய அதிபர் சங்கத்தின் தலைவர் பரகும்பா வீரசிங்கவைத் தொடர்பு கொண்டு இச்சம்பவம் தொடர்பாக அவர்களது கருத்தைக் கேட்ட போது:- இச்சம்பவத்தை தான் ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்டதாகவும், இதுவரையில் உத்தியோகபூர்வமாக எந்த முறைப்பாடோ அறிவித்தலோ தனக்கு இன்னும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் தவறுசெய்திருந்தால் உரிய நபர் பாரபட்சம் இன்றி தண்டிக்கப்பட வேண்டுமெனவும் அந்த பொசன் வெளிச்சக்கூடு போட்டி கல்விக் காரியாலயத்தின் அனுமதியோடு நடைபெற்ற ஒன்றா என்பன போன்ற விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்

ஒரு ஆசிரியையை அவமானப்படுத்தியதற்காக ஒரு மாகாண சபை உறுப்பினரையே கைது செய்தவர்கள், ஒரு மாணவனை நியாயமான காரணமில்லாமல் மிருகத்தனமாக அடித்து காயப்படுத்திய போதும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வாய்மூடி எதுவும் நடக்காதது போன்று இருப்பது மாணவர்களை அச்சத்துக்குள்ளாக்கும் செயலாகவே உள்ளதுடன் அந்த ஆசிரியரின் மிருகத்தனமான செயலை நியாயப் படுத்துவதுமாகவே உள்ளது.


**பஹமுனா அஸாம்**

Colour: Cyan Magenta Yellow Black

# மட்பாண்ட உற்பத்திகளை பாதுகாக்க என்ன செய்யப் போகிறீர்கள்?

ஆண்டாண்டு காலமாக எமது முன்னோரால் பரம்பரை பரம்பரையாக பேணப்பட்டு வந்த மட்பாண்ட கைத்தொழிலானது இன்று அழிவடையும் நிலையை நோக்கிச் செல்கின்றது.

வவுனியா மாவட்டத்தில் கணேசபுரம், தோனிக்கல், கோவிற்குளம் ஆகிய பகுதிகளில் மட்பாண்ட கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. இவர்கள் இன்றோ, நாளையோ என தமது கைத்தொழில் நடவடிக்கையை கைவிடும் நிலையில் உள்ளனர்.





இது தொடர்பாக மட்பாண்ட உற்பத்தியில் ஈடுபடும் என்.செல்லத்துரை கூறுகையில்,

என்ர அப்பா, தாத்தா என நாம் பரம்பரை பரம்பரையாய் மட்பாண்ட உற்பத்தில ஈடுபடுறம். என்ர அப்பான்ர காலத்தில எல்லாம் மண் சட்டி, பானைகளுக்கு நல்ல கிராக்கி இருந்தது. ஆனா இப்ப யார் தான் இதை வாங்கிறாங்க என தனது ஆதங்கத்தை கொட்டித் தீர்த்தார்.

முன்னைய காலங்களில் மக்கள் தமது தேவைகளுக்கும் உணவு சமைப்பதற்கும் மண் சட்டி, பானை, உண்டியல், சிட்டி, அலங்காரப் பொருட்களையே பயன்படுத்தி வந்தனர். மலையகம் மற்றும் சிங்கள மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் தற்போதும் மண் பாத்திரங்கள் பாவனையில் இருப்பதை காணலாம். ஆனால் வவுனியா நிலைமை அவ்வாறு இல்லை. அலுமினியம், சில்வர், பிளாஸ்ரிக் பாத்திரங்களையே மக்கள் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மண்பாத்திரங்களுக்கான கேள்வியானது குறைவாகவே உள்ளது.

பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் மாத்திரம் அதிக விற்பனை இடம்பெறுவதாகவும் மண்ணால் செய்யப்பட்ட உண்டியலை இப்ப ஒருவரும் வாங்கிறதில்ல அதோட மண் அலங்கார பொருளுக்கு இருந்த கிராக்கியும் போயிட்டுது என்கிறார் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வரும் எம்.பாலா.

இதனால், மட்பாண்ட தொழில் செய்யும் குடும்பங்கள் தமது வாழ்வாதரத்தை கொண்டு நடத்த முடியாது திணறுகின்றனர்.

தற்போது அதிகளவிலான சில்வர், அலுமினிய பாத்திரங்கள் பாவனைக்கு வந்துள்ளது. ஆனால் அதிலுள்ள தீமைகளை புரியாத மக்கள் அதனை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். எமது முன்னைய மக்கள் இயற்கையுடன் ஒன்றித்து மண்பாத்திரங்களை பயன்படுத்தி வாழ்ந்ததன் காரணமாகவே நோய்நொடி இன்றி ஆரோக்கியமாக நீண்டகாலம் வாழ்ந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் தற்போது மக்களுக்கு சிறுநீரக பிரச்சினை முதலிய சில நோய்கள் ஏற்படுவதற்கு அலுமினியப் பாத்திரங்களின் பாவனையும் காரணம் என வைத்திய ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மட்பாத்திரங்களில தண்ணி வைத்து குடித்தால் குளிர்மையான நீரைக் குடிக்கலாம். மட்பாத்திரத்தில சமைக்கிற உணவுக்கு தனி சுவை. நோயும் வராது ஆனா மட்பாத்திரங்கள் கடையில பெரிதாக விற்கிறதில்ல என்கிறார் கே.இந்திராணி.

இது இவ்வாறு இருக்க, அநுராதபுரப் பிரதேசத்தில் மட்பாண்ட உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இவ் ஊக்குவிப்பு எமக்கு இல்லையா? என்பதே வவுனியா மட்பாண்ட உற்பத்தியாளர்களின் கேள்வியாகும்.

கே.நாதன் என்பவர் கூறுகையில்:-

நாம் பல வருசமா இந்த தொழிலத்தான் செய்யுறம். ஆனா இப்ப பெருசா பிஸ்னஸ் இல்ல. உற்பத்திக்கு தேவையான மண்ணை குளத்தில தான் எடுக்கிறம். எல்லா குளத்திலயும் எடுக்கவும் ஏலாது. அதிகாரிகள் மண் எடுக்க ஒழுங்கா பேர்மிற் தாறாங்க இல்ல. நாம என்ன பண்ணுறது என்றார்.

உற்பத்திக்கு தேவையான மண்ணை பெற்றுக் கொள்வதில் இவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குவதுடன் விற்பனை குறைவால் பொருளாதார பிரச்சினைகளையும் எதிர் நோக்குகின்றனர்.

இது தவிர, இவ் உற்பத்தியில் ஈடுபடுகின்ற மக்கள் இவ் உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி குறைவடைந்து செல்வதால் தமது பிள்ளைகளை வேறு தொழில்களில் ஈடுபடுத்தி வருகின்றனர். இதனால் இன்னும் குறிப்பிட்ட சில வருடங்களின் பின் பரம்பரை பரம்பரையாக பேணப்பட்ட இவ் மட்பாண்ட கைத்தொழிலானது அழிவடைந்து செல்லும் சூழ்நிலை காணப்படுகின்றது.

மட்பாண்ட உற்பத்தி என்பது வெறுமனே ஒரு தொழில் நடவடிக்கை என்பதற்கு அப்பால் எமது மக்களின் அடையாளங்களையும் கலாசார பண்பாடுகளையும் வெளிப்படுத்துகின்ற உயரிய ஒரு படைப்பு என்பதை வரலாறுகள் வெளிப்படுத்துகின்றன.

எனவே, பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சரே மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்கள தலைவர்களே இம் மக்களுக்காகவும் எமது கலாசார பண்பாடுகளை பாதுகாப்பதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? என்பதே எமது கேள்வியாக உள்ளது.

-கே.வாசு-



இலங்கை திருச்சபை வாலிபர் இயக்கத்தின் கொழும்பு வடபிராந்தியம் அண்மையில் நடத்திய மென்பந்து சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் கொழும்பு மோதர பரிசுத்த பேதுருவின் ஆலயமும், பெண்கள் பிரிவில் பரிசுத்த யாக்கோபுவின் ஆலயமும் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டன. சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்ட அணிகளை இங்கு காணலாம்.




# இனி விறகு விற்று பிழைக்க ஏலாது

நாகரிக வளர்ச்சி காரணமாக காஸ்சிலிண்டர், குக்கர், மின்சார அடுப்புகள் என்பன நகரம் தொடக்கம் கிராமம் வரை சென்றடைந்துள்ளது. இதன்காரணமாக விறகு பயன்படுத்துபவர்கள் தொகையும் நாளுக்கு நாள் குறைவடைந்து செல்கிறது.

வவுனியா மாவட்டத்தில் நகரையண்டிய பகுதியில் சுமார் 50 வரையான குடும்பங்கள் விறகு வியாபாரத்தையே தமது ஜீவனோபாயமாக கொண்டு நடத்துகின்றனர். இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி வருகிறது.

விறகு வியாபாரியான சுந்தரபுரத்தைச் சேர்ந்த இ.செல்வம் இவவாறு கூறுகின்றார்.

நான் பெரிசா படிக்கல. இதால 10 வருசமா விறகு வியாபாரம் தான் செய்யிறன். முந்தி எல்லாம் விறகு மூலம் நல்லா உழைச்சம். ஆனா இப்ப கரண்ட் அடுப்பாலையும், சிலிண்டராலையும் விறகை விற்கேலாம இருக்கு. இரண்டு பிள்ளைகளுடன் சோற்றுக்காக கஸ்டப்பட வேண்டியிருக்கு என்றார்.

நகரம் மட்டுமன்றி கிராமப் பகுதிகளிலும் விறகுக்கான கேள்வி குறைவடைந்து செல்கிறது. நாள் ஒன்றுக்கு 20 கிலோமீற்றர் தூரம் சென்று விறகை கட்டி பகல் முழுக்க கொண்டு திரிந்து 1300 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக அவர்கள் கூறுகின்றனர்.



எல்லாரும் வேலைக்கு 8 மணிக்கு தான் போவாங்க. ஆனா விறகு தொழில் செய்யிற நாம விடிய 3 மணிக்கு எழும்பி 4 மணிக்கெல்லாம் காட்டுக்கு போறம். காட்டில விறக எடுத்திட்டு 12 மணிக்கு கிளம்பினா அதை விற்கிறதுக்கு ஊரெல்லாம் மாலை வரை சுத்த வேண்டி இருக்கு. அப்படி திரிஞ்சும் சில வேளை விற்க ஏலாது என எல்லப்பர் மருதங்குளத்தைச் சேர்ந்த ம.சதீஸ்குமார் புலம்புகிறார்.

வேகாத வெய்யிலில் ஊரெல்லாம் திரிந்தும் விறகை ஒருவரும் வாங்காது விடும்போது செத்திடலாம் போலிருக்கும் என்கின்றனர் விறகு வியாபாரிகள்.

மாரி காலத்தில் விறகு வெட்டமுடியாது விறகு வியாபாரிகள் கஸ்டப்படுவதுடன், காட்டு மரங்களை வெட்டும்போது பொலிஸிடமும் வன இலாகாவிடமும் அடிக்கடி சிக்குகிறார்கள்.

கஸ்டப்பட்டு உடலை வருத்தி தொழில் செய்யும் எங்களுக்கு தலைக்கு மேல் சோதனை என்கின்றனர் விறகு வியாபாரிகள்.

எனவே, தங்களது குடும்ப நிலையை கருத்தில் கொண்டு தங்களுக்கு மாற்று தொழில் வாய்ப்புக்களை செய்து கொடுத்து நிம்மதியாக வாழ அதிகாரிகள் உதவி செய்யமாட்டார்களா? என்று ஏக்கத்துடன் கேள்வி எழுப்புகிறார்கள்

-கே.வாசு-

# பாரம் சுமக்கும் பட்டாம்பூச்சிகள்





குடும்பத்தில் 11 வயது சிறுவனும் அவனுக்கு 8 வயதில் தங்கையும் இருந்தால் என்ன செய்வார்கள்?

விளையாடுவார்கள் செல்லச் சண்டை போடுவார்கள், அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டு அம்மா அப்பாவிடம் முறையிடுவார்கள்.

ஆனால் பதுளை மீகாகியுல நிகபொத கிராமத்தில் வசிக்கும் 11 வயது அண்ணன் விஸ்வ, 8 வயதுத் தங்கை ஹேஷனி இருவரும் தம் குடும்பத்தையே தம் பிஞ்சுக்கரங்களில் சுமக்கிறார்கள். பலரும் தம் குழந்தைகளுக்கு இவர்களை உதாரணம் காட்டும் அளவுக்கு ஊரே போற்றும் அளவுக்கு வாழ்கிறார்கள்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்புவரை இவர்களின் வாழ்க்கையும் சராசரி சிறுவர்களின் வாழ்க்கையைப் போலவே இன்பங்கள் பொழுதுபோக்குகள் நிறைந்து இருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் குடும்பத் தலைவனான தந்தை இறந்தது, அதைத் தொடர்ந்து தாய் படுக்கை நோயாளியாகிப் போனது இவர்களின் வாழ்க்கையை திசை மாற்றிவிட்டது. தங்களையும் தம் தாயையும் பராமரிக்கும் மொத்தச் சுமையும் இவர்கள் வசமாகிப்போனது.

அண்ணன் விஷ்வவும் தங்கை ஹேஷனியும் மீகாகியுல வித்தியாலயத்தில் முறையே தரம் 5 இலும் 2 இலும் கல்வி கற்கிறார்கள். வீட்டு வேலை செய்வது, விறகு தேடுவது, உடைகழுவுவது, சமைப்பது என குடும்பத்தின் மொத்த வேலைகளையும் இந்தச் சிறுவர்களே செய்கிறார்கள், அதுமட்டுமல்ல நோய் வாய்ப்பட்டுள்ள தாயைக் குளிப்பாட்டுவது, உணவு கொடுப்பது முதல் அவரை மலசலகூடத்திற்கு அழைத்துச் செல்வதுவரை அத்தனையையும் இந்தச் சின்னஞ்சிறுகளே செய்கிறார்கள். தாயின் கவனிப்பில்லாத அநேகமான சிறுவர்கள் பள்ளிப்படிப்பை மூட்டை கட்டி வைத்துவிடுவது வழமை என்றாலும் இந்த அண்ணனும் தங்கையும் இத்தனை வீட்டு வேலைகளையும் செய்துவிட்டு பாடசாலை செல்லவும் நன்றாக கல்வி கற்கவும் தவறுவதில்லை.

இந்தச் சிறுவர்கள் குறித்து அவர்களது தாய் இவ்வாறு சொல்கிறார்.

எனது சொந்த இடம் பதுளை சொரணதோட்ட, கணவனின் ஊர் குருணாகல், இருவரும் சந்தித்து காதல் திருமணம் செய்து கொண்டோம். என் கணவர் மிக நல்லவர். எங்களுக்காகவே உழைத்தார். இவரும் கூலி வேலை செய்து குடும்பத்தை சந்தோஷமாகக் கொண்டு சென்றோம். ஆனால் அவர் ஒரு இதய நோயாளி, நானும் குழந்தைகளும் கவலைப்படுவோம் என்பதற்காக அவர் தன் வருத்தத்தைக் காண்பிப்பதில்லை,

எங்களுக்காக அவர் உடல்நிலையைப் பொருட்படுத்தாது உழைத்தார்.

ஆனால் நோய் அவரை கொஞ்சம் கொஞ்சமாக கரைத்தது. பதுளை வைத்தியசாலையில் அனுமதித்தோம். அங்கிருந்து கொழும்புக்கு அனுப்பினார்கள். இதயத்தில் இரண்டு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. எனினும் அவர் உயிர்பிழைக்கவில்லை. பிணமாகவே வீடுவந்தார்.

அவரது நிழலில் வாழ்ந்த எமக்கு அவரது பிரிவு நிலைகுலைய வைத் தது. என்றாலும் மனதைத் தேற்றிக் கொண்டு குழந்தைகளுக்காக உழைக்கத் திட்டமிட்டேன்.

ஆனால் விதி வேறு கணக்குப் போட்டுவிட்டது. அவரது 3 மாத தான நிகழ்வின்போது அந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

ஒருவார கடும் மழையால் நனைந்திருந்த வீட்டுச் சுவர் என்மீது சரிந்து விழுந்து விட்டது. நான் கண் விழித்த போது ஆஸ்பத்திரிக் கட்டிலில் அசைய முடியாது கிடந்தேன். என் முதுகெலும்பு முறிந்திருந்தது. இனி நான் எழுந்து நடமாடுவது சாத்தியமில்லை என்றார்கள்.

10 மாதம் வைத்தியசாலையில் கிடந்தேன். பிள்ளைகளை என் சகோதரர்கள் கொண்டுபோய் வளர்த்தார்கள். எனினும் தாயும் இல்லாது தந்தையும் இல்லாது என்ன பாடுபடுவார்கள் என நினைத்து கலங்கினேன். என்னை வீட்டுக்கு அனுப்புங்கள் என கெஞ்சினேன். மருத்துவர்கள் மனம் இசைந்தார்கள்.



வீட்டுக்கு வந்த என்னை என் குழந்தைகள் ஒரு குழந்தையைப் போல பராமரிக்கிறார்கள்.

எங்கள் நிலை கண்டு இரங்கிய பிரதேச சபை உறுப்பினர் சிறிய சில்லறைக் கடையொன்றை வைத்துத் தந்தார், கடைக்குச் சாமான் கொண்டு வருவதும் என் மகன்தான். வேறு கடைகள் இருந்தாலும் இப்பகுதி மக்கள் எமக்கு உதவுவதற்காக இங்கே வந்து பொருட்கள் வாங்குவார்கள், பிள்ளைகள் இருவரும் காலையில் எல்லா வீட்டு வேலைகளையும் செய்து விட்டு கடையில் அம்மாவை விட்டு பாடசாலை செல்வார்கள். பாடசாலை விட்டு வந்ததும் கடைக்கு வந்து வியாபாரத்தை கவனிக்கிறார்கள்.

எனக்கு ஒரே ஒரு ஆசைதான். என் கால்கள் சுகமாகி என்னால் நடக்க முடிந்தால் எல்லா சுமைகளையும் நான் பெற்றுக்கொண்டு என் குழந்தைகளை பட்டாம்பூச்சிகளாக பறக்க விடுவேன். இறைவன் அதற்கு வாய்ப்பளிப்பாரா என்று ஏக்கத்துடன் கேட்கிறார் அந்தத்தாய்.

ஒருவருக்கொருவர் பாசமாய் இருக்கும் அந்தக் குடும்பத்தை பார்க்கும்போது எவருக்கும் பொறாமையும் இரக்கமும் ஒருசேர வருவது நிச்சயம்.

ஜீ.வி.எஸ்.

நன்றி லங்காதீப

Colour: Cyan Magenta Black

# கவிதைகள்

## என் உயிரே உனக்காக

நேரில் இருந்தாலும்
நெருப்பில் இருந்தாலும்
தங்கத்தின் நிறம் மாறாது
அதுபோல
அருகில் இருந்தாலும்
உண்மையான உறவு
பிரியாது!
இதை உணர்ந்துகொள்ளும்
வரை உயிரே!
உனக்காக நான்
காத்திருப்பேன்
என் உயிர்
பிரியும் வரை!

தே.சுபா,
நாவின்ன.

## மறக்க முடியாத நினைவுகள்

வெவ்வேறு ஊரில் இருந்து வந்து
ஓர் உயிராய் ஆனோம் இன்று
கசக்கிப் பிழிந்துதறி
காயப்போட்ட நினைவுகள்
கனவாக வருகிறது
கண் விழித்திருக்கும் பொழுதிலும்
இதமான மழையில்
வந்து குதித்தாய் நீ
தலைக்குள் ஏறாத
கணிதபாடம் போல
ஓரிரு வருடம்
ஒதுங்கியே இருந்தாய்

ஆனாலும்,
காலம் கடந்தது
தென்றல் போல் வந்து
இதயக் கதவை இதமாய்
இன்பமாக வருடினாய்

பதினாறின் பருவமும்
பளிச்சென்ற உருவமும்
நினைவில் வந்தன
அந்தக்காலங்கள்
மௌனக் காதல்
பேசத் தொடங்கியது இன்று

நெஞ்செல்லாம்
நீ பிடிக்கின்ற நினைவுகள்
உன் விரல் பிடித்து நடந்த
என் காதல் இன்று
வழுக்கி வழுக்கி விழுகிறது
என் இதய வாசற்படியில்

மறுபடியும் உன் நினைவுகள்
தேவை - மறப்பதற்கு அல்ல
இதயவறையில் சுமந்த உன்னை
கருவறையில் என் பிள்ளையாய் சுமக்க
ஒரு வரம் அய்யோ!!
கண்மூடா கனவை
கலைத்த தென்றல்
இதமான மழையை
என்மேல் படச்செய்தது
ஈரம் உடல் முழுக்க
கூதலாயிருக்கிறது
உன் நினைவுகளை
போர்த்தி
தூங்கப்பேகிறேன்

பரமசிவம் இந்துஜா,
போகவந்தலாவ.

## என் அப்பா

அள்ளி அன்னமூட்டி
அருகினிலே உறங்கவைத்து
அன்புதனை அள்ளி வழங்கி
அறிவுதனை தினம் தந்து
அம்மா என்று என்னையே
பிரியமுடன் தினம் அழைத்து
பள்ளிப் படியேறி
பாடங்கள் பல கற்று
பல்கலைக்கழகம் சென்று
பட்டம் பெற்று
பதவிகள் பல பெற வைத்து
பாரினிலே வள்ளலாய்
வண்ணமுற வாழ வைத்து
வாழ்க்கை முறையை நன்குரைத்து
வழிகாட்டும் தெய்வம் என்
அப்பாதானே!

ம.வினோஜினி,
ஹட்டன்.

## உயிரே

முதல் நாள் பார்த்து
மயங்கிப் போனேன்
என் உயிர் அனைத்தும்
உனக்குத் தந்தேன்

உறவைப் பார்க்காது
உன்னை உறவாக்கினேன்
உண்மையில் நீ என்ன
உறவென் அறியாமல்

இப்போது சிக்கித் தவிக்கிறேன்
சிதைந்து போகிறேன்
பார்வையில் மயங்கினேன்
பாதகியாகி போகிறேன்

மறப்பதற்கு இயலாமல்
மயானமாகிறேன்
முடிவெடுப்பதற்கு இயலாமல்
உடைந்து கிடக்கிறேன்

பு.வசந்தமலர்,
குயில்வத்தை.

## இதயம் இருக்கின்றது

அன்பே உன்னைச் சுமக்கும்
நந்தவனமாக அல்ல
பிரிந்துபோன நம்
அன்புக்கதையின்
நினைவுப் பிணங்களை
சுமக்கும் கல்லறை
கல்லாக எனக்கும்
இதயம் இருக்கிறது

சுப்ரமணியம் வினோதா,
நுவரெலியா.

## சுட்டித் தம்பி

எனக்கோர் சுட்டித் தம்பி
என்னுள்ளே மலர்ந்த தம்பி
வட்டமான முகம் கண்டோர்
வடிவான தம்பி அவன்
துள்ளும் துடிப்பும்
துணிவுடனே பிறந்த தம்பி
என்னை எந்நேரமும்
சீண்டிவிடும் சின்னத் தம்பி
அன்பான என் தம்பி
எல்லோரும் விரும்பும் தம்பி
எனக்கு பிடிக்கும் தம்பி

லோ.ஹம்சப்பிரியா,
புசல்லாவை.

## சிரிப்பு

உன் மனம்
வலிக்கும் போது சிரி.
பிறர் மனம் வலிக்கும் போது
சிரிக்க வை!

அபி

## ஏழிசை இசை மேதை

பாட்டிற்கு ஒரு ராஜன்
பாரில் பிறந்தான் சௌந்தரராஜன்
கடவுள் தந்த காந்தக் குரலோன்
காலன் அழைத்திட்டான் - தீரா
கவலையை தந்திட்டான்

உன்போன்ற இனிமைக் குரல்
உலகத்தில் யாருக்குண்டு?
உன் பாடலை கேட்காதவர்கள்
உலகத்தில் யாருமில்லை
இனிய உன் குரலால்
இமயமலை புகழ் பெற்றாய்

ஆயிரமாயிரம் பாடல்கள் பாடி
அகிலத்தையே புகழவைத்தாய்
நான் பெற்றசெல்வம்
நலமான செல்வம்
என்று பாடினாய்
ஒரு திரைப்பாடல்
ஐம்பது ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும்
அழியாது நீ தந்த
இசைச் செல்வம்

பாடும் வரம் பெற்றாய்
பாரெல்லாம் இசை புகழடைவாய்
இனியும் உன்போன்ற
இசைமேதை யார் பிறப்பார்....?

உன் புகழ் ஓங்கிடவே
உள்ளம் நொந்து
எழுதிட்டேன் ஒருசோக கவி
எழுந்து நீ வருவாயோ....?
என் கவியை பாடிடவே

ஆர்.பி.எஸ்.மணியம்,
கொட்டகலை.



## உன்னில் நான்

ஏக்கப் பெருமூச்சின்
தாக்கம் தாளாது
தள்ளாடி சல்லடையாகிப்
போன - என்னிதய
கூண்டை, அணுவணுவாக
அரிந்து அதில் குளிர்
காய்வதில் அன்பே
உனக்கென்ன
ஆனந்தம்

டி.எஸ்.சாந்தி,
வெஸ்ட் ஹோல்.

## கண்ணீர்

என் வாழ்க்கையும் கண்ணும்
அறியாத பொருள் - கண்ணீர்
அதை என்னிடம்
அடகு வைத்துச் சென்றவனே
ஒரு முறையேனும் உன்
முகத்தைக் காட்டு - பணம்
இல்லாமல் அடகு பொருளை
திரும்பவும் தருகின்றேன்

சாலினி, கண்டி.

## உறவு

உறவுகள் வரும்வரை
உயிருடன்
காத்திருப்பேன்
வானில் வெண்ணிலவாய்
காலையில்
குளிர்ப்பனியாய்
இரவில் மின்மினியாய்
மனதில் அழியாத கோலமாய்
என் உறவுகள் வரும்வரை
காத்திருப்பேன்


பிரவீனா,
பதுளை.

## என்னவள்

கண்ணாடியின் விம்பங்களாய்
என் இதயம் கிழித்து
சென்றாள் என்னவள்
என் இதயக் கண்ணாடியில்
அவள் மின்னல் முகம்
பட்டதால் என்னவோ
அது நொருங்கிவிட்டது
காதலெனும்
பூந்தொட்டியாய்

எம்.வசந்தமலர்,
[illegible]

உதய சூரியன் "கவிதைச்சரம்"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:-----------------------------
முகவரி:-----------------------------
தொலைபேசி இல-----------------------------



அபி

# கல்லாறு-04

– சி.சந்திரன் –

அடுத்த அறையில் அவர் மகன் தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் டீச்சர் எழுந்து போய் முகத்தையும் கழுவிக்கொண்டு சாரியெல்லாம் சரிசெய்து கொண்டு வந்தார். எனக்கும் டீ ஊற்றிக் கொடுத்தார். பிஸ்கட் கொடுத்தார்.

என்னிடம் மிகவும் கனிவாக, இங்கு நடந்தது எதையும் சின்ன மாஸ்டர் வந்தால் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். அப்போது எனக்கு முழுக்கரு புரிந்தது.

இந்த சந்தர்ப்பத்தை வைத்து ஹெட்மாஸ்டரைப் பழிவாங்க வேண்டும் என்று என் மனதில் ஒரு திட்டம் உருவாகத் தொடங்கியது.

சிறிது நேரத்தில் ஹெட்மாஸ்டர் என்னைக் கூப்பிட்டார்; போனேன். ஒரு சீப்பு பழுத்த வாழைப்பழம் கொடுத்தார். சில நாட்களுக்கு முன்பு நானும் சில மாணவர்களும்தான் தோட்டத்தில் வெட்டி தூக்கிக் கொண்டுபோய் அவர் வீட்டில் கொடுத்தோம்.

கட்டை வாழைத்தார், மிகவும் சுவையாக இருக்கும். மற்ற நாளாக இருந்திருந்தால் அந்தப் பழங்களை ஒரு பிடி பிடித்திருப்பேன், அன்று அதைப்பார்க்கும்போதே வெறுப்பாக இருந்தது. ''டேய்! சின்ன மாஸ்டர் வந்தால் ஒன்றும் சொல்லக்கூடாது. சொன்னாயோ தொலைச்சுப்புடுவேன் தொலைச்சு!'' வழமைப் போல உறுமினார்.

''யாரை யார் தொலைக்கிறார் பார்க்கலாம்'' மனதுக்குள் கறுவிக்கொண்டேன்!

மறுநாள் காலையில் மாணவர்கள் பாடசாலைக்கு வந்த பின்பே நான் வீட்டுக்குப் போனேன். போய் உடைகளை மாற்றிக்கொண்டு பாடசாலைக்கு வந்தேன். மத்தியானம் சின்ன மாஸ்டர் வந்தார்.

எனக்கு ஒடியல், கருப்பட்டி இன்னும் என்னென்னவோ கொண்டு வந்திருந்தார். டீச்சர் ஜாடையாலேயே ஒன்றும் சொல்லிவிட வேண்டாம் என்றார்.

ஹெட்மாஸ்டர் கூப்பிட்டு மீண்டும் இரகசியமாக எச்சரித்தார்.

நான் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். சின்ன மாஸ்டரிடம் சொல்லிவிட வேண்டும், இந்தப் பாவி சின்ன மாஸ்டரிடம் உதைவாங்க வேண்டும். இவனை அடித்து நொருக்க வேண்டும். அடி உதை தாங்காமல் அலறி அடித்துக்கொண்டு டைத்தியக்காரனாக ஓட வேண்டும்! என் வெஞ்சினம் தீரவேண்டும்.

பாடசாலைவிட்டு மாணவர்களெல்லாம் போய் விட்டார்கள். நான் ஆங்கிலம் படிக்கவேண்டும் என்ற சாட்டில் அங்கேயே இருந்தேன்.

சின்ன வாத்தியார் ''இன்றைக்கு ரொம்ப களைப்பா இருக்கு நாளைக்கு படிக்கலாம் போ'' என்றார். நான் போவதைப்போல பாசாங்கு செய்து கொண்டே தாமதித்துக்கொண்டிருந்தேன்.

சின்ன மாஸ்டர் தோட்டத்துப்பக்கம் போனார். நானும் பின்னாலேயே போய், சொல்லிவிட்டேன்! சொல்லியே விட்டேன். சின்னமாஸ்டர் ஒரு கணத்தில் ஆடிப்போய்விட்டார். கண்கள் சிவந்தன உதடுகள் துடித்தன. அதன் பிறகு நடக்கப்போகும் விபரீதத்தைப் பார்க்க நான் அங்கே நிற்கவில்லை!

ஹெட்மாஸ்டர் நார் நாராய் கிழிபடப்போகிறார்.

அன்றிரவு எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை, என்ன நடக்கப்போகிறதோ என்று ஏதேதோ நினைவுகளில். அன்றைய இரவு முடிந்துபொழுது விடிந்தது.

என்ன நடந்திருக்கும் என்று அறிந்து கொள்ள வேண்டிய ஆவலுடன், ஆனாலும் ஏதோ இனம் புரியாத பயத்தாலும் தயங்கித்தயங்கி பாடசாலைக்குப் புறப்பட்டேன்.

பாடசாலையை நெருங்கும்போது எனக்கு முன் பாடசாலைக்கு வந்த மாணவ மாணவிகள் ஆற்றங்கரைப்பக்கம் பாலத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தார்கள். கீழ்ப்பிரிவு தோட்டத்து தொழிலாளர்களும் ஓட்டமும் நடையுமாக பாலத்துப்பக்கம் விரைந்து கொண்டிருந்தார்கள். என்ன? ஏது? என்று யாரையும் விசாரிக்கும் பக்குவம் எனக்கு இல்லை. நானும் பாலத்தடிக்கு ஓடினேன். ஆற்றில் சனங்கள் கூட்டமாக இருந்தார்கள்.

நான் பாலத்திலிருந்து எட்டிப்பார்த்தேன். பாறையின் மீது டீச்சரைத் தூக்கிக் கிடத்தியிருந்தார்கள், உயிரற்ற உடலாக!

முற்றும்

## என்ன ஒரு மோசடி

ஒரு உணவு விடுதியில் கீழ்க்கண்டவாறு எழுதிப் போடப்பட்டிருந்தது.

''இங்கு சாப்பிட்டு விட்டு நீங்கள் பணம் தர வேண்டியதில்லை. உங்கள் குழந்தைகள் பெரியவர்கள் ஆனதும் அவர்களிடம் வசூலித்துக் கொள்வோம்.''

இதைப் பார்த்தவுடன் பசியாய் இருந்த ஒருவன் உணவகத்திற்குள் நுழைந்து வயிறு புடைக்க சாப்பிட்டான். சாப்பிட்டு வெளியே செல்லும்போது அவனிடம் விடுதிச் சிப்பந்தி ஒரு பில்லை நீட்டினார். அவனுக்குக் கோபம் வந்து விட்டது. விடுதி உரிமையாளரிடம், ''என்ன மோசடி செய்கிறீர்களா? பிள்ளைகளிடம் வசூலித்துக் கொள்வோம் என்று எழுதிப் போட்டுவிட்டு இப்போது சாப்பிட்டதற்கு பணம் கேட்கிறீர்களே?'' என்று கத்தினான். விடுதிக்காரர் அமைதியாகச் சொன்னார், ''ஐயா, இது நீங்கள் சாப்பிட்டதற்கான பில் அல்ல. உங்கள் தந்தை இங்கு முன்னர் சாப்பிட்டதற்கான தொகைக்குரிய பில் இது. இதை உங்களிடம்தானே வசூலிக்க வேண்டும்?'' அவன் மயங்கிக் கீழே விழுந்தான்.

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி

### 04.07.13 முதல் 10.07.13 வரை

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | நன்மை | வரவு | பெருமை | இன்சொல் | ஜெயம் | பணிவு | நேர்மை |
| ரிஷபம் | பாசம் | ஆக்கம் | இன்பம் | பரிவு | வரவு | போட்டி | வெற்றி |
| மிதுனம் | தாமதம் | நன்மை | உற்சாகம் | முயற்சி | சோர்வு | மேன்மை | ஆதரவு |
| கடகம் | நட்பு | உதவி | நலம் | தெளிவு | பயம் | முயற்சி | ஆதாயம் |
| சிம்மம் | சாதனை | சுகம் | அமைதி | அனுகூலம் | உழைப்பு | பரிசு | தேர்ச்சி |
| கன்னி | உயர்வு | வாழ்வு | புகழ் | புகழ் | களிப்பு | பக்தி | நட்பு |
| துலாம் | நஷ்டம் | கவனம் | பாசம் | உதவி | நன்மை | செலவு | பொறுமை |
| விருச்சிகம் | அமைதி | நலம் | சுபம் | மகிழ்ச்சி | சாதனை | நட்பு | சிந்தனை |
| தனுசு | ஆர்வம் | பயம் | போட்டி | கோபம் | இலாபம் | பாராட்டு | நன்மை |
| மகரம் | நலம் | புகழ் | சாந்தம் | பெருமை | அச்சம் | குழப்பம் | விருத்தி |
| கும்பம் | வெற்றி | இலாபம் | விவேகம் | சுகம் | ஆர்வம் | அனுகூலம் | களிப்பு |
| மீனம் | கோபம் | ஜெயம் | மேன்மை | வெற்றி | யோகம் | பேராசை | மேன்மை |

## மன்றாசி வைத்தியசாலையின் குறைபாடுகள் நிவர்த்தி

நுவரெலியா மாவட்ட சுகாதார பிரிவுக்கு உட்பட்ட அக்கரப்பத்தனை மன்றாசி வைத்தியசாலை சுமார் 75 வருடங்களுக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்டது.

இவ்வைத்தியசாலை அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டாலும் பல்வேறுப்பட்ட குறைபாடுகளுடனேயே தொடர்ச்சியாக இயங்கி வந்தது. இந்நிலையில் தற்போதைய வைத்தியர் சதீஸின் முயற்சியினால் மக்களின் ஆதரவோடு இவ் வைத்தியசாலையின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டன.

இச்செயற்பாட்டில் முழுமையான பங்களிப்பை செய்து வைத்தியசாலைக்கு உதவிய பொதுமக்களை கௌரவப்படுத்தும் நிகழ்வு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் வைத்தியர் சதிஸ் தலைமையில் மன்றாசி ஆக்ராஸ் விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நுவரெலியா பிராந்திய சுகாதார அத்தியட்சகர் மகேந்திர செனவிரத்ன, நுவரெலியா பிரதேசசபை உப தலைவர் சச்சிதானந்தன், சீட்டி தொழிற்சாலை அதிகாரி ஏமந்த, பொலிஸ் நிலைய அதிகாரி வட்டியாராச்சி உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்துக் கொண்டனர்.

ஆரம்பத்தில் இவ் வைத்தியசாலையின் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்து இப்பிரதேச மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்ற நோக்கில் வைத்தியர் மகேந்திர செனவிரத்ன என்பவரால் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டு சிறுசிறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இவரின் இடமாற்றத்துக்குப் பின்னர் வைத்தியர் சுரங்கவித்தாரனவின் முயற்சியால் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினூடாக இப்பிரதேச மக்களின் முழு பங்களிப்புடன் பிரசவ விடுதி உட்பட சிறுவர் பூங்கா, பல் வைத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இவரும் இடமாற்றம் பெற்றுச்செல்ல இவருக்கு பதிலாக இவ்வைத்திசாலையை பொறுப்பேற்று நடத்திய வைத்தியர் சதிஸின் விடா முயற்சியால் பலரின் உதவிகளைப் பெற்று இன்னும் சில வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவ் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க பலரும் பல்வேறு வகையில் உதவிகளை வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில் 86 பேருக்கு நினைவுச் சின்னங்களும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அக்கரப்பத்தனை நிருபர்

# தோட்டங்கள் தோறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழிநடத்தல் குழுக்கள்

பெருந்தோட்டங்களில் இருந்து பணிப்பெண்களாக வெளிநாடு செல்பவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக பெருமளவில் அதிகரித்து வருகிறது. ஆயினும் இவ்வாறு செல்பவர்களால் சம்பந்தப்பட்ட குடும்பங்களில் மேம்பாடும் பொருளாதார நன்மையும் ஏற்பட்டிருக்கிறது என்பதை விட வெளிநாட்டு வேலைவாய்ப்பால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றிய செய்திகளே அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பெற்றுச் செல்பவர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பற்றிய அறிவு பெருந்தோட்ட மக்கள் மத்தியில் மிகவும் குறைவாக இருப்பது இதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இந் நாள் வரையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்றால் முழுக்க முழுக்க இடைத்தரகர்களிடம் தங்கியிருக்கும் நிலைமையே பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படுகிறது.

இந்த இடைத்தரகர்களின் மோசடிகளை தட்டிக்கேட்க எவரும் இல்லை என்ற நிலையில் அவர்கள் வெளிநாடு செல்பவர்களை தாங்கள் நினைத்தபடி ஆட்டிப்படைக்கிறார்கள்.

வெளிநாடு செல்லும் பலருக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் இந்த இடைத்தரகர்களை மட்டுமே தெரியுமேயன்றி தாங்கள் எந்த தொழில் வாய்ப்பு ஏஜன்சி அல்லது முகவர் மூலம் வெளிநாடு சென்றனர் என்ற விபரமோ அந்த ஏஜன்சி முறையாக பதிவு செய்யப்பட்டதா என்ற விபரமோ தெரிவதில்லை. இதனால் வெளிநாட்டிற்கு சென்றவருக்கு ஏதாவது பிரச்சினை ஏற்படும் போது அல்லது அவரோடு உள்ள தொடர்புகள் துண்டிக்கப்படும்போது யாரைத் தொடர்பு கொள்வது, எவரிடம் இருந்து தகவல் பெறுவது என்பது போன்ற விடயங்கள் தெரியாமல் குடும்பத்தவர்கள் தவிக்கும் சம்பவங்கள் பல பெருந்தோட்டப் பகுதிகளில் நடைபெறுகின்றன.

இதைவிட வெளிநாடு செல்லும் பல பெருந்தோட்டப் பெண்களுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ள இடைத்தரகர்கள் வேண்டுமென்றே எந்த ஒரு விபரத்தையும் வழங்குவதில்லை.

பல சந்தர்பங்களில் வெளிநாடு பயணம் செய்வதற்கு முந்திய நாளிலேயே அடுத்த நாளுக்கான டிக்கட் வந்திருப்பதாக அறிவித்து அவசர அவசரமாக அவர்களை அழைத்து செல்கிறார்கள். இதனால் வெளிநாடு செல்லும் பெண்கள் அது நாள் வரை கட்டிக்காத்து வந்த குடும்பத்தினதும் பிள்ளைகளினதும் பாதுகாப்பு, பிள்ளைகளின் கல்வி என்பன தொடர்பாக எந்தவித முன்னேற்பாடுகளையும் செய்ய முடியாமல் கடுமையான மனவேதனையோடும் தவிப்போடும் வெளிநாடு செல்லவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படுகிறது.

இதனால் குடும்பத்தில் ஏற்படும் பாதிப்பு கொஞ்ச நஞ்சமல்ல. குடும்பங்கள் நிலை குலைந்து போய்விடுகின்றன. சம்பளம் தொடர்பாக திட்டமிடல் இல்லாததாலும், சேமிப்பதற்காக முன்னேற்பாடு எதுவும் இல்லாததாலும் தான், பணம் முழுவதும் கணவருக்கு அனுப்பட்டு கணவன் அந்த பணம் முழுவதையும் மதுவருந்தி குடும்பம் சீரழியும் நிலையும் ஏற்படுகிறது.

இந்த அவலங்களை தடுக்க வெளிநாடு போகுமுன்னர் தகுந்த முன்னேற்பாடுகள் செய்துகொள்ள கால அவகாசம் இருத்தல் வேண்டும். தரகர்களின் மோசடிகள் முறியடிக்கப்பட வேண்டும்.

தொழில் வாய்ப்பிற்காக வெளிநாடு செல்பவர்கள் தங்கள் சுயமாக சரியான முடிவு எடுக்கவும், முடிவெடுத்த பின்னர் போதிய ஆயத்தங்கள் செய்துகொள்ளவும் அவர்களுக்கு அவகாசமும் சந்தர்ப்பமும் வழங்கப்பட வேண்டும்.

இந்த விடயங்களை எடுத்துச் சொல்வதற்காக பெண்கள் தமது கழக அங்கத்தவர்களுக்காக பிரிடோ நிறுவனம் அண்மையில் செயலமர்வு ஒன்றை நடத்தியது. இந்த செயலமர்வின் இறுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பாதுகாப்பானதாகவும், சம்பந்தப்பட்டவர்களை இடைத்தரகர்களின் பிடியில் இருந்து விடுவித்து வெளிநாடு செல்பவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சமூகத்தின் பங்களிப்பைப் பெறும் நோக்குடன் ஒவ்வொரு தோட்டத்திலும் பாதுகாப்பான வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழிநடத்தல் குழுக்கள் அமைக்கப்படுதல் அவசியம் என தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் பெண்கள் குழு அங்கத்தவர்கள், தோட்ட கோயில் பரிபாலன சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் ஆகியோரையும் இணைத்துக்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்படும் பாதுகாப்பான வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழிநடத்தல் குழு அங்கத்தவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்து விடயங்கள் அதாவது, வெளிநாடு செல்வதாக தீர்மானித்திருப்போருக்கு எவ்வாறு வழிகாட்டி ஆலோசனை வழங்குவது, அவர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தோடு தொடர்புபடுத்துவது, பணியகத்தினால் வெளிநாடு செல்பவர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், செல்லுமுன்னர் எடுக்க வேண்டிய முன்னேற்பாடுகள், பிரச்சினைகள் ஏற்பட்டால் எவரோடு தொடர்பு கொள்வது ஆகியவை தொடர்பாக விளக்கமளிப்பர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பது ஒரு தவிர்க்க முடியாத விடயமாக ஆகிவிட்ட சூழலில் அதன் விளைவாக இதுவரை நாம் பார்த்தும் கேட்டும் வந்த பாதகங்களை இல்லாமலாக்கி அல்லது முடிந்தளவு குறைத்து அதனால் மக்கள் அதிகளவு நன்மை பெறுவதற்கு உதவுவதே ஒரு சமூக நிறுவனத்தின் கடமை. அதைத்தான் பிரிடோ நிறுவனம் செய்ய முயற்சிக்கிறது.

கிருபாகரன்
பிரிடோ நிறுவனத்தின் பாதுகாப்பான வெளிநாட்டு வேலைவாய்ப்பு அறிவூட்டல் அலுவலர்

## எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும்

எட்டு வயது சிறுமி வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக சமையலறைக்குச் சென்று தாயிடம் கேட்டாள்.

ஏம்மா நான் ஒரு சூனியக்காரி மாதிரி பயங்கரமாவா இருக்கேன்?

அம்மா: இல்லையே கண்ணு...!

மகள்: அப்போ என் கண்ணாவது ஆந்தை மாதிரி பெரிய கண்ணா இருக்கா?

அம்மா: இல்லடா தங்கம்...!

மகள்: அம்மா என் மூக்கு தட்டையாவா இருக்கு?

அம்மா: இல்லையேடா...!

மகள்: அட்லீஸ்ட் கொழுத்த பன்றி மாதிரியாவது நான் இருக்கேனா?

அம்மா: இல்லம்மா ஏன் இதெல்லாம் கேக்குறாய்? நீ சும்மா ஹீரோயின் மாதிரி ஸ்லிம்மா தானே இருக்காய்...!

மகள்: அப்போ ஏம்மா எல்லாரும் என்னப் பாத்து நீ உங்க அம்மா மாதிரியே இருக்கேம்மானு சொல்றாங்க?

அம்மா: ??



ஆசிரியர்: உலகிற்கு முக்கியம் சூரியனா? சந்திரனா?

மாணவன்: சந்திரன்தான் சார்!

ஆசிரியர்: எப்படி?

மாணவன்: பகல்ல வெளிச்சம் இருக்கும்போதுதான் சூரியன் ஒளி கொடுக்குது. ஆனால் சந்திரன் ராத்திரில வெளிச்சம் இல்லாத போது ஒளி கொடுக்குதுல்ல



அப்பா நான் வெற்றியின் முதல்படியில் நிற்கிறேன்

வெரி குட்...! நீதான் கிளாஸ்ல பர்ஸ்ட்டா...?

இல்லப்பா... நீங்கதான் சொன்னீங்களே... வெற்றியின் முதல் படி தோல்வின்னு...!

ஆசிரியர்: உன்னை வரிசையிலே கடைசிலதான் நிக்கச் சொன்னேன் ஏன் இங்கே வந்தே?

மாணவன்:- கடைசில ஏற்கனவே வேறுவொரு பையன் நிற்கிறான் டீச்சர்...

## மன்னிப்பு

எல்லாத் தவறுகளுக்கும்
கடைசித் தீர்ப்பாய் இருப்பது
மன்னிப்பே...!

தவறுகளின் தன்மையும்,
அளவுகளும்
வேறுபடுகின்றன
ஆனால் மன்னிப்புகள் ஒன்றே...!

மன்னிப்பளித்து மன்னிப்பளித்து
தினம் தினம் தவறுகளை
நியாயப்படுத்தி விடுகிறோம்...!

மன்னிப்புகளுக்கு
பஞ்சமில்லை இங்கு
அதனால் தான்
தவறுகள் தவறாமல் நடக்கிறது...!

தற்போது இங்கு
மன்னிப்பு தவறாகிவிட்டது
தவறுகளை மன்னித்தே...!

நான் சொல்றபடி நடங்க, உங்க எடை தானா குறையும்...

நான் என்ன செய்யணும்? டாக்டர்

அதான் சொன்னேனே நடங்கன்னு...

# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க



ஒரு துறவி ஒரு ரயில் பயணம் செய்கிறார். அவரிடம் பயணச்சீட்டு பரிசோதகர் சோதனை செய்கிறார்...

பரிசோதகர்:- தயவு செய்து உங்க டிக்கெட்டை காட்டுங்க...

துறவி:- அப்படி ஒன்றும் என்னிடத்தில் இல்லை.

பரிசோதகர்:- நீங்கள் எங்கே போக வேண்டும்?


துறவி:- ராமர் பிறந்த இடமான அயோத்திக்கு..!

பரிசோதகர்:- வா, போகலாம்!

துறவி:- எங்கே?

பரிசோதகர்:- இறைவன் கிருஷ்ணா பிறந்த இடமான ஜெயிலுக்கு.

## சவப்பெட்டியில் கிடக்கும் போது..!



மூவரிடம் ஒரே கேள்வி கேட்கப்படுகிறது. சவப் பெட்டியில் நீங்கள் கிடத்தப்பட்டு குடும்பத்தார் வருத்தத்துடன் சூழ இருக்கும் போது உங்களை பற்றி என்ன சொல்லவேண்டும் என்று விரும்புவீர்?

முதலாம் மனிதர் :- இதோ இங்கே கிடப்பவன் உலகில் சிறந்த மருத்துவன் மட்டுமில்லை நல்ல குடும்பஸ்தனும் கூட

இரண்டாம் மனிதர் :- நான் ஒரு சிறந்த ஆசிரியர் என்னால் பல வெற்றிகரமான மாணவர்கள் உருவாக்கப்பட்டனர் என்று சொல்ல வேண்டும்.

மூன்றாமவர் :- அதோ பாருங்கள் அவன் அசைகிறான்

## காசு, பணம், துட்டு மணி... மணி...!

உட்கார்ந்தவன் காலில் மூதேவி
ஓடியவன் காலில் சீதேவி!

விளக்கம்: நமது பண்டைய தமிழ் மரபில் மூதேவி என்பது தரித்திரம் மற்றும் வறுமையின் அடையாளமாகும். சீதேவி என்பது செல்வம். உட்கார்ந்தவன் என்ற சொல் உழைப்பை மறந்துவிட்டு அல்லது மறுத்துவிட்டு சோம்பேறித் தனத்துடன் ஊர்வம்பு பேசிக்கொண்டு சும்மா இருப்பவர்களை குறிக்கிறது. ஓடியவன் என்ற சொல் கடின உழைப்பாளியையும் கடமையை தவறாது செய்பவனையும் குறிக்கிறது. அதாவது உட்கார்ந்தவன் வறுமைக்கு சொந்தக்காரனாகி விடுகிறான். உழைக்கிறவன் வளமான வாழ்விற்கு அதிபதியாகி விடுவான் என்பதை ஆணித்தனமாக அடித்து சொல்கிறது.

இதில் குறிப்பாக காலில் என குறிப்பிட்டிருப்பதன் காரணம் ஒரு நபரின் உடலை கால் தாங்கி பிடிக் கிறது போல அந்த நபரின் சோம்பலை யும் சுறுசுறுப்பையும் பொறுத்து அவரின் வாழ்வை மூதேவி என்ற ஏழ்மையும் சீதேவி என்ற செல்வமும் தாங்கிப்பிடிக்கும் என சொல்லியிருப்பதாக பொருள் கொள்ளலாம்.

## தயிர் இல்லாத சாதம்



முதியவர் ஒருவர் ஹோட்டலுக்கு சாப்பிடச் சென்றார். பரிமாறும் பையனிடம் சாப்பாட்டின் விலையைக் கேட்டார்.

பையன் ''சாப்பாடு 50 ரூபாய்'' என்றான்.

முதியவர் தன் சுருக்குப் பைக்குள் கைவிட்டு பணத்தை எண்ணினார்.

''கொஞ்சம் குறைந்த சாப்பாடு இல்லையா?'' என கேட்டார்.

எரிச்சலடைந்த பையன் ''பெருசு... தயிர் இல்லாம சாப்பிடுறியா...? 45 ரூபாய்தான்'' என்றான்.

பெரியவர் சம்மதித்து சாப்பிட்டார். பையன் பில் கொடுத்தபோது முதியவர் 50 ரூபாய் நோட்டை தட்டில் வைத்தபோது பையன் ஏளனமாகப் பார்த்தான். மீதி 5 ரூபாவை அவன் கொடுத்தபோது, முதியவர் சொன்னார் ''வச்சுக்கோ... உனக்குத் தர என்னிடம் வேறு பணமில்லை...''




என்னம்மா உங்க கணவர் காணாம போய் இருபது நாள் ஆச்சுன்னு சொல்றீங்க...? ஏன் இவ்வளவு நாள் கழிச்சு வந்து கம்ப்ளைண்ட் பண்றீங்க? இன்னிக்குத் தான் சார் அவரோட சம்பள நாள்

பையன்:- அம்மா எதிர் வீட்டு ஆண்டி பேரு என்னம்மா?

அம்மா:- விமலாடா..

பையன்:- அப்பாவுக்கு இது கூட தெரிய மாட்டேதுங்கும்மா அந்த ஆன்டிய ''டார்லிங்''னு கூப்பிடுறார்.

# வகுப்பறையில் ஒரு (இறந்த) மாணவன்...!



பலருக்கும் பலவிதமான அனுபவங்கள் இருக்கும். அவை தனிப்பட்ட முறையில் சில உணர்வுகளைத் தந்து கொண்டிருக்கும். இந்த பேய், ஆவிகள் பற்றிய அனுபவம் மட்டும் அனைவருக்கும் ஒரேமாதிரியான பய உணர்வையே தந்து கொண்டிருக்கிறது.

மற்றவர்களுக்கு நடந்த பேய் அனுபவங்களைக் கேட்க நமக்கு ஆசையாக இருக்கும். ஆனால் அப்படியொரு அனுபவம் நமக்கு நேர்ந்தால் எப்படி இருக்கும்...?

அப்படி ஒரு சம்பவம் எனக்கு அல்ல என் அக்காவுக்கு நிகழ்ந்தது. அந்த சம்பவம் நடந்து சுமார் 19 வருடங்களை கடந்து விட்டது.

எனது மூத்த சகோதரி பிரபல தமிழ் பாடசாலை ஒன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவர் தனது வகுப்பு மாணவர்களை மிகவும் நேசிப்பார். அன்பாக அவர்களின் குறைநிறைகளை சுட்டிக் காட்டி பாடங்களில் குறைந்த புள்ளிகளை எடுக்கும் மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் மேலதிக வகுப்புகளையும் நடத்துவார்.

அன்று ஒரு விடுமுறை நாள். வழமைபோல பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்காக பாடசாலைக்கு சென்றிருக்கிறார்.

நேரத்தோடு சென்றதால் மாணவர்கள் ஒருவரும் வந்திருக்கவில்லை. மாணவர்கள் வரும் வரை பாடசாலையைச் சுற்றி நடக்க ஆரம்பித்தார். அப்படியே நடந்து தனது வகுப்பறை பக்கம் செல்ல வகுப்பறைக்குள் யாரோ இருப்பது தெரிந்தது. யாராக இருக்கும் என்று ஜன்னலுக்கு அருகில் சென்று பார்க்க வகுப்பறையில் அமர்ந்து 15 வயது மதிக்கத்தக்க மாணவன் ஒருவன் ஏதோ எழுதிக் கொண்டிருப்பது தெரிந்தது.

எப்படி இவன் உள்ளே சென்றிருப்பான்? ஒருவேளை இவன் உள்ளே இருப்பது தெரியாமல் வகுப்பறையை பூட்டிவிட்டார்களோ என பல யோசனைகள் தோன்ற அப்படியே முன்னால் வந்து கதவை பார்த்தபோது கதவு பூட்டியபடியே இருந்தது. எல்லா ஜன்னல்களையும் அசைத்து பார்க்க அவையும் அப்படியே இருந்தன.

நேரமும் மாலை நான்கு மணியைக் கடந்தது.

பாவம் பசியில் இருப்பானே என்ற எண்ணம் தோன்ற ஜன்னலுக்கருகில் சென்று தம்பி... தம்பி... என்று கூப்பிட அவன் எதையுமே பொருட்படுத்தாது அவசர அவசரமாக எதையோ எழுதிக் கொண்டிருந்தான்.

மீண்டும் மீண்டும் அழைத்தும் அவன் பார்க்கவில்லை.

ஜன்னலைத் தட்டி தம்பி... தம்பி... என்றதும் லேசாக திரும்பிப் பார்த்தான்.

அப்படியொரு அழகான தோற்றம். இதுவரை அவனை இந்த வகுப்பில் பார்த்ததே இல்லை. அந்த தோற்றத்தைக் கண்டு பிரமித்து தன்னிலைக்கு வருவதற்குள் அந்த பையனைக் அந்த இடத்தில் காணவில்லை.

அக்கா அதிர்ந்து போய் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் பாடசாலை பாதுகாப்பு ஊழியர் வந்து கதவைத் திறந்துவிட்டார்.

வகுப்பறைக்குள் சென்ற அக்கா... தம்பி இங்கே வா... என்று அழைத்தார். பயப்படாமல் வா... நான் உன்னை அடிக்கமாட்டேன். யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று சொல்லியும் அவன் வெளியில் வரவேயில்லை.

வகுப்பிலுள்ள அனைவரையும் அக்காவுக்கு நன்றாகத் தெரியும். இவன் யார்? புதிதாக இங்கு வந்து என்ன செய்கிறான். யாராக இருக்கும். இதுவரை இவனை பார்த்ததே இல்லையே என சிந்தனை பலவாறு சென்றது.

எல்லா இடங்களிலும் தேடியும் அவனைக் காணவில்லை. பூட்டிய ஜன்னல், கதவுகள் பூட்டியபடியே இருக்க இவன் எந்த வழியில் சென்றிருப்பான்? இந்த கட்டிடத்தை விட்டு வெளியேற வேறு வழிகளும் இல்லையே என யோசித்துக் கொண்டு திரும்பிப்பார்க்க ஜன்னலருகில் திடீரென ஒரு ஒளி தோன்றி மறைந்தது.

ஒளி வந்த இடத்தை நோக்கி நடந்த அக்காவுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அந்த இடத்திற்கு சென்றதும் ஒளி இருந்த இடத்தை கையால் தொட ஒளி மாயமாய் மறைந்தது. திகைத்துப்போய் ஒளி இருந்த இடத்தை உற்றுப்பார்க்க அங்கே பிறப்பு, இறப்பு திகதிகளுடன் பெயர் பொறிக்கப்பட்டு ஞாபகார்த்த பதாகை இருந்தது.

அந்த வகுப்பில் இருக்க வேண்டிய வயது அந்த பையனுக்கு. இறந்துவிட்டான். அவன் ஞாபகார்த்தமாக கட்டப்பட்ட மண்டபம்தான் இந்த மண்டபம். திகைத்துப் போன அக்கா அப்படியே வகுப்பறையில் சாய்ந்தார்.

வகுப்புக்காக மாணவர்களும் வந்து சேர்ந்தார்கள். வந்தவர்கள் டீச்சர் மயங்கிக் கிடப்பதைப் பார்த்து கத்திக் கதறினார்கள். தண்ணீரை தெளித்து சுயநினைவிற்கு கொண்டு வந்தார்கள்.

எழுந்து நடந்தவிடயம் எதையும் சொல்லாமல் இன்று வகுப்பு வேண்டாம் நாளை படித்து தருகிறேன். வகுப்பிற்கு வந்தவர்கள் உங்களது பெயர்களை எழுதி வைத்துவிட்டு செல்லுங்கள் என்றார்.

மாணவர்களும் தங்களது பெயர்களை எழுதிவிட்டு வீட்டுக்கு திரும்பினர். டீச்சரும் புத்தகங்களை எடுத்துக் கொண்டு செல்வதற்கு ஆயத்தமாக பெயர் எழுதிய புத்தகத்தை எடுத்து பார்க்க அதில் கடைசியாக ஞாபகார்த்த பதாகையில் இருந்த அதே பெயர் எழுதப்பட்டிருந்தது.

தகவல் தொகுப்பு - அபி



# பேசும் கிளிக்ஸ்

படங்கள் - தர்ஷன மனமேந்திர



**நாங்களும் போராடுவோம்**

லஞ்சம்
பெற்றுக்கொண்டு
மதுச்சாலை
அனுமதி
வழங்கியதாக
தெரிவித்து
வாதுவ பகுதியில்
இடம்பெற்ற
ஆர்ப்பாட்டத்தில்
ஈடுபட்ட சிலர்.




**எங்கே நிம்மதி? இங்கே நிம்மதி!**

வீதியில் யார்
போனால் என்ன
வந்தால் என்ன
சுகமான காற்றை
ரசித்தபடி
கொழும்பு
கோட்டை
மேம்பாலத்தின்
மீது படுத்திருக்கும்
முதியவர்



**நாங்களும் ராஜாக்கள்**

குதிரை ஏறி
சவாரிசெய்ய
பணமில்லை.
அதனால்தான் இந்த
எருமைச்சவாரி
(மகியங்கனையில்
ஒரு காட்சி)



**ஆபத்தான பயணம்!**

இது ஆபத்தான
பயணம்தான்.
ஆனால்
குடும்ப வண்டி
ஓடவேண்டுமே!



**என்னவெல்லாம் செய்யச் சொல்றாங்க!**

அண்மையில்
இடம்பெற்ற
பொலிஸ் சாகசக்
கண்காட்சியின்
போது...!



**இது சுமையல்ல!**

குடும்பத்தின்
வறுமைச் சுமை
போக்க நான்
சுமக்கும் இந்தச்
சுமை ஒரு
பொருட்டல்ல

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டாரால் (68, எலிஹவுஸ் றோட், கொழும்பு 15) 04.07.2013 வியாழன் 94, பாக்ஸணந்த மாவத்தை கொழும்பு-13 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.